தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY

Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL

சென்னை மலர்: 01 இதழ்: 161 23.01.2026 வெள்ளிக்கிழமை
Chennai Volume: 01 Issue: 161 Friday pages 8 Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(23-01-2026)
விசுவாவசு ஆண்டு, தை -9
பிறை: வளர்பிறை
திதி
பஞ்சமி நள்ளிரவு 12.51 வரை
பிறகு சஷ்டி
நட்சத்திரம்:
பூரட்டாதி பிற்பகல் 2.08 வரை
பிறகு உத்திரட்டாதி
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 10.30-12.00 மணி
எமகண்டம்
பிற்பகல் 3.00 - 4.30 மணி
சூலம் - மேற்கு.
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 5-6 மணி

மேஷம் ..... உதவி
ரிஷபம்..... சுபம்
மிதுனம் ..... ஆக்கம்
கடகம்.....தேர்ச்சி
சிம்மம் ..... வளமை
கன்னி..... நன்மை
துலாம் .....ஆர்வம்
விருச்சிகம்..... சிந்தனை
தனுசு..... பாராட்டு
மகரம் ..... பாசம்
கும்பம்..... விருத்தி
மீனம்..... பரிசு

அரசு ஊழியர்களின் போராட்டங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது இந்த அரசு

முதல்வர் பேச்சு

சென்னை,ஜன.23:

அரசு ஊழியர்களின் போராட்டங்களை அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது என சட்டப்பேரவையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

இன்றையசட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் போராட்டம் குறித்து அதிமுக எம்எல்ஏ தங்கமணி கேள்வி எழுப்பினார்.

இதற்குபதில்அளித்தமுதல்வர் மு.க. ஸ்டாலின், 'எம்எல்ஏ தங்கமணி அக்கறையோடு அரசு ஊழியர்களின் போராட்டம் குறித்து கேள்வி எழுப்பியிருக்கிறார். இந்த அக்கறை உங்கள் ஆட்சியில் ஏன் இல்லை? ஆனால் நாங்கள் போராட்டம் நடத்தும் ஆசிரியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி கிட்டத்தட்ட 95%கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கிறோம். அரசு ஊழியர்கள் போராடுவது அவர்கள் உரிமை. ஆனால் அதிமுக ஆட்சியைப்போல நாங்கள் அவர்களை இரவோடு இரவாக கைது செய்யவில்லை. சிறையில் அடைக்கவில்லை.

அரசு ஊழியர்களின் போராட்டங்களை இந்த அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. அதிமுக ஆட்சியில் அரசு ஊழியர்களைக் கொசைப்படுத்தி பேசியது எல்லாம் மறந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறன்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர அமைச்சர்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். 23 ஆண்டு கால ஓய்வூதிய பிரச்னையை நாங்கள் முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

அரசு ஊழியர்கள் மகிழ்ச்சியாக இருப்பது எதிர்கட்சியினருக்கு பிடிக்கவில்லை. அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் கண்டிப்பாக நிறைவேற்றப்படும். மீண்டும் திமுக அரசுதான் அமையும்" என்று தெரிவித்தார்.

எடப்பாடி பழனிசாமி வீட்டில் பியூஷ் கோயல்! காரசார விருந்துடன் தொகுதிப் பங்கீடு!!

சென்னை,ஜன.23:

எடப்பாடி பழனிசாமி வீட்டில் நேற்று காலை அவருக்கு விருந்தளிக்கப்படுகிறது. காரசாரமாக காலை விருந்துடன் அதிமுக - பாஜக இடையே தொகுதிப் பங்கீடு தொடர்பானபேச்சுவார்த்தையும் நடத்தப்படுகிறது என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் மோடி தமிழகத்துக்கு வெள்ளிக்கிழமை வருகை தரவிருக்கும் நிலையில், அதற்குள் தோதல் கூட்டணியை இறுதி செய்து கூட்டணித் தலைவர்களை ஒரே மேடையில் பங்கேற்க வைக்க தமிழக பாஜக தீவிரம் காட்டி வருகிறது. அதன் அடிப்படையிலேயே நேற்று அமமுக இணைப்பு நடந்தது, நேற்று எடப்பாடி பழனிசாமியுடன் தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை தொடங்கியிருக்கிறது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி கிட்டத்தட்ட இறுதிசெய்யப்பட்டிருக்கும் நிலையில், இன்று தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை தொடங்கியிருக்கிறது. இந்த விருந்தில், நயினார் நாகேந்திரன், எல். முருகன், வானதி ஸ்ரீனிவாசன் உள்ளிட்ட பாஜக தலைவர்களும், அதிமுக சார்பில் எஸ்.பி. வேலுமணி, திண்டுக்கல் சீனிவாசன், கே.பி. முனுசாமி உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

தமிழக பேரவைத் தோதல் ஒரு சில மாதங்களில் நடைபெறவிருக்கும் நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணியை விரிவுபடுத்தும் பணியை அதிமுகவும், பாஜகவும் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றன.

அதன் ஒருப்படியாக, டி.டி.வி.தினகரனை தேசிய ஜனநாயக கூட்டணிக்குள் கொண்டுவந்தால் டெல்டா மற்றும் தென்மாவட்டங்களில் திமுகவுக்கு சவாலாக அமையும் என பாஜக, அதிமுகவில் இரண்டாம் கட்டத் தலைவர்கள் தங்களது கட்சித் தலைமையிடம் தொடர்ந்து மறைமுகமாக அழுத்தம் கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில்தான், சென்னையில் புதன்கிழமை தமிழக பாஜக தோதல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் மற்றும் அமமுக பொதுச் செயலா டி.டி.வி.தினகரன் சந்திப்பின்போது கூட்டணி உடன்பாடு எட்டப்பட்டது.

தற்போது, தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குள் அன்புமணியின் பாமக, அமமுக இணைந்துள்ள நிலையில், நேற்று அதிமுக - பாஜக இடையே தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

பிரதமர் மோடி ஆட்சியில் ஹிந்து உணர்வுக்கு புத்துயிர் குடியரசு துணைத் தலைவர் பெருமிதம்

சென்னை,ஜன.23:

கர்நாடக மாநிலம் சித்தகங்கா மடத்தின் மறைந்த பீடாதிபதி சிவகுமார மகா சுவாமிகளின் 7-ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்ச்சியில் அவர் புதன்கிழமை பங்கேற்றார். அப்போது, அவர் பேசியதாவது:

தர்மம், சேவை, வசுதைவ குடும்பகம், இயற்கைக்கு மரியாதை ஆகியவை மூலம் சமூகத்தை இந்தியாவின் ஆன்மிகமும், கலாசாரமும் நிலை நிறுத்தியுள்ளது. அண்மைகாலங்களில் சுவாமி சிவகுமார மகா சுவாமிகளின் காலத்தை வென்ற போதனைதான் நிர்வாகத்தில் நமது நாட்டை வழிநடத்துகின்றன. அவரின் வாழ்க்கை, அனைத்து மக்களுக்கும் இரக்கம், தியாகம், ஏழைகளுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற அருமையான செய்தியை நல்குகிறது.

உண்மையான ஆன்மிகம் அனைவரையும் ஈர்க்கும் என்பதை சுவாமி போதித்துள்ளார். அதேபோல், பிறப்பால் யாரும் பெரியவர் இல்லை, அனைவரும் சமம் என்பதும், ஏழைகளுக்கு சேவை செய்வதன் மூலமே புனிதர்களாக முடியும் என்பதையும் சுவாமி போதித்துள்ளார்.

நமது நாட்டில், பிரதமர் மோடி தலைமையின்கீழ் ஹிந்து உணர்வுக்கு புத்துயிர் கிடைத்துள்ளது. நாம் யார், நாம் எங்கிருந்து வந்தோம், எந்த குறிக்கோள்கள் நம்மை முன்னோக்கி வழிநடத்துகின்றன என்ற பெருமையை தெரிந்து கொண்டுள்ளோம். அது நமது நாட்டின் நாகரிகம், நவீன உலகத்தை விட உயர்வானது என்பதை உறுதிப்படுத்துகிறது. இன்று இந்தியாவானது, வளர்ச்சி மற்றும் பாரம்பரியத்தால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. அதுதான் பாரம்பரியத்துடனான வளர்ச்சி என்றார் சி.பி. ராதாகிருஷ்ணன்.

குடியரசுத் தலைவர் மாளிகை தோட்டம் பிப்ரவரி 3-ல் திறப்பு

புதுடில்லி,ஜன.23:

குடியரசுத் தலைவர் மாளிகை செயலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

குடியரசுத் தலைவர் மாளிகை வளாகத்தில் உள்ள அம்ரித் உத்யான் (முகல் தோட்டம்) பிப்ரவரி 3 முதல் மார்ச் 31 வரை பொதுமக்களின் பார்வைக்கு திறக்கப்படுகிறது. வாரத்தில் 6 நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 6 மணி (கடைசி அனுமதி மாலை 5.15 மணி) வரை இந்த தோட்டத்தைப் பார்வையிடலாம்.

பராமரிப்புப் பணிகளுக்காக வாரந்தோறும் திங்கட்கிழமையும் ஹோலி பண்டிகையை முன்னிட்டு மார்ச் 4-ம் தேதியும் தோட்டம் மூடப்படும். தோட்டத்துக்கு அனுமதி இலவசம். HTTPS://VISIT.RASHTRAPATIBHAVAN.GOV.IN/ என்ற இணைய தளத்தில் முன்பதிவு செய்யலாம். நேரடியாக வருபவர்களுக்காக நுழைவாயிலுக்கு அருகில் பதிவு மையங்கள் இருக்கும். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

கர்நாடக பேரவையிலும் ஆளுநர் வெளிநடப்பு! எம்எல்ஏக்கள் முற்றுகையிட்டதால் பரபரப்பு!

பெங்களூரு,ஜன.23:

கர்நாடகசட்டப்பேரவையில் ஆண்டின் முதல் கூட்டத்தொடர் இன்று காலை தொடங்கியது. மரபுப்படி மாநில ஆளுநர் உரையுடன் கூட்டத்தொடர் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி,இன்றுகாலை கர்நாடக சட்டப்பேரவைக்கு வருகை தந்த ஆளுநர் தாவர்சந்த் கெலாட், அரசு தயாரித்துக் கொடுத்த உரையைப் படிக்காமல், அவர் சொந்தமாக தயாரித்த உரையை வாசிக்க முயற்சித்ததாக கூறப்படுகிறது.

இதற்கு அரசு தரப்பில் எதிர்ப்பு எழுந்த நிலையில், உரையை வாசிக்காமல் பேரவையைவிட்டு வெளிநடப்பு செய்தார். இதனிடையே அவரை வெளியேறவிடாமல் காங்கிரஸ் எம்எல்ஏக்கள் பாதையை வழிமறித்து முழக்கங்கள் எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இருப்பினும், ஆளுநரின் பாதுகாப்பு அதிகாரிகள் அவரைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

இதுதொடர்பாக சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய முதல்வர் சித்தராமையா, "ஒவ்வொரு ஆண்டின் முதல் கூட்டத்தொடரில் ஆளுநர் உரையாற்ற வேண்டும், அது அமைச்சரவையால் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது அரசியலமைப்புச் சட்டம். இன்று, அமைச்சரவை தயாரித்த உரைக்கு பதிலாக, ஆளுநர் தானே தயாரித்த உரையைப் படித்தார். இது இந்திய அரசியலமைப்புச் சட்டம் 176 மற்றும் 163 ஆகிய பிரிவுகளை மீறுவதாகும். அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஆளுநர் தனது கடமையை நிறைவேற்றவில்லை. அவரின் செயலுக்கு எதிராக நாங்கள் போராட்டம் நடத்தப் போகிறோம். இதுதொடர்பாக உச்ச நீதிமன்றத்தை அணுகலாமா? வேண்டாமா? என்பது குறித்து ஆராய்ந்து வருகிறோம்" எனத் தெரிவித்தார்.

முன்னதாக, கடந்த செவ்வாய்க்கிழமை தமிழக சட்டப்பேரவையில் அரசு தயாரித்த உரையைப் படிக்காமல் ஆளுநர் வெளிநடப்பு செய்தது குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதாவின் சொத்துகளை ஏலம் விடுவதற்கு அதிகாரம் உள்ளது வருமான வரித் துறை வாதம்

சென்னை,ஜன.23:

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சட்டப்பூர்வ வாரிசாக அவரது அண்ணன் மகள் ஜெ.தீபா மற்றும் மகன் ஜெ.தீபக் ஆகியோரை சென்னை உயர்நீதிமன்றம் அறிவித்தது. எனவே, ஜெயலலிதாவின் வருமான வரி நிலுவைத் தொகையான ரூ.36.56 கோடியை 7 நாள்களுக்குள் செலுத்த வேண்டும் என்று இருவருக்கும் வருமான வரித் துறை கடந்த ஜூலை 23-ஆம் தேதி நோட்டீஸ் அனுப்பியது. இந்த நோட்டீஸை எதிர்த்து ஜெ.தீபா தொடர்ந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், நோட்டீஸுக்கு தடை விதித்து உத்தரவிட்டது.

இதையடுத்து நோட்டீஸைத் திரும்பப் பெற்ற வருமான வரித் துறை, வருமான வரி நிலுவைத் தொகையை ரூ.13.69 கோடியாக குறைத்து மீண்டும் நோட்டீஸ் அனுப்பியது. புதிய நோட்டீஸை எதிர்த்து ஜெ.தீபா சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அதேபோல், ஜெ.தீபக், தனது வரி நிலுவைத் தொகையை தவணை முறையில் செலுத்தி வருவதாகக் கூறி மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி சி.சரவணன் முன் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது ஜெ.தீபா தரப்பில், வருமான வரித் துறை இந்த வழக்கில் இதுவரை பதில் மனு தாக்கல் செய்யவில்லை. எனவே, நோட்டீஸை ரத்து செய்ய வேண்டும் என வாதிடப்பட்டது.

அதற்கு வருமான வரித் துறை தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ஏ.பி.ஸ்ரீநிவாஸ், ஏற்கெனவே தொடரப்பட்ட 2 வழக்குகளில் வருமான வரித் துறை தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வருமான வரி நிலுவையை வசூலிக்கும் பொருட்டு ஜெயலலிதாவின் சொத்துகளை ஏலம் விடுவதற்கு வருமான வரித் துறைக்கு அதிகாரம் உள்ளது. எனவே, வருமான வரித்துறையின் நோட்டீஸுக்கு தடை விதிக்கக் கூடாது என வாதிட்டார்.

இதையடுத்து வருமான வரித்துறை நோட்டீஸுக்கு தடை விதிக்க மறுத்த நீதிபதி, இதுதொடர்பாக 2 வாரங்களுக்குள் விரிவான பதில் மனு தாக்கல் செய்ய வருமான வரித் துறைக்கு உத்தரவிட்டார். அதுவரை வருமான வரி நிலுவைவை வசூலிக்கும் நடவடிக்கையை நிறுத்தி வைக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

வங்கி ஊழியர்கள் வருகிற 27-ந்தேதி நாடு தழுவிய வேலைநிறுத்தம்

புதுடெல்லி,ஜன.23:

அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ். நாகராஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

எல்.ஐ.சி. நிறுவனத்தில் 100 சதவீத அன்னிய நேரடி முதலீட்டை வழங்கிய மத்திய அரசின் முடிவை ஏற்க முடியாது. மேலும், வங்கி ஊழியர்களுக்கு வாரத்திற்கு 5 நாட்கள் மட்டுமே வேலை, வேலை நேரத்தை முறைப்படுத்துதல், ஓய்வூதியத்தை உயர்த்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளை நாங்கள் நீண்ட நாட்களாக வலியுறுத்தி வருகிறோம். எங்கள் கோரிக்கைகளை 6 மாத காலத்திற்குள் நிறைவேற்றுவதாக கடந்த 2024-ம் ஆண்டு இந்திய வங்கிகள் சங்கம் (ஐ.பி.ஏ.) உறுதி அளித்தது. ஆனால், இதுவரை அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

கடந்த மார்ச் மாதம் அறிவிக்கப்பட்ட போராட்டம், அரசின் உறுதிமொழியை ஏற்று ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் தற்போது வரை அரசுடன் எந்த முன்னேற்றமும் இல்லாததால், வருகிற ஜனவரி 27-ந்தேதி ஒரு நாள் நாடு தழுவிய வேலைநிறுத்த போராட்டத்தை நடத்த முடிவு செய்துள்ளோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

திருவாரூர் பள்ளி மாணவிக்கு டெல்லி குடியரசு தின விழாவில் பங்கேற்க அழைப்பு

திருவாரூர், ஜன.23: மத்திய பாதுகாப்பு அமைச்சகமும், மத்திய கல்வித் துறையும் இணைந்து தேச பக்தியை வளர்க்கும் நோக்கில் பள்ளி மாணவர்களுக்கான ஓவியம் மற்றும் கட்டுரைப்போட்டியை இணையதளம் வாயிலாக நடத்தியது.

இதில் நாடு முழுவதும் இருந்து 2 கோடி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் திருவாரூர் ஜிஆர்எம் அரசு உதவிபெறும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி 11-ம் வகுப்பு பயிலும் மாணவி வைகயோஷனா கட்டுரைப்போட்டியில் கலந்து கொண்டார்.

இவர் சுதந்திரப்போராட்ட காலத்தில் சுபாஷ் சந்திரபோசின் ராணுவப் படையில் சேர்ந்து பணியாற்றிய நீரா ஆர்யா என்ற பெண்மணி குறித்து கட்டுரை எழுதினார்.

அந்த கட்டுரையில் நீரா ஆர்யா சுதந்திரப்போராட்ட காலத்தில் எதிர்கொண்ட எதிர்ப்புகள், கணவரே அவரை ஆங்கிலேயர்களிடம் காட்டிக்கொடுக்க முற்பட்ட போது, கணவர் என்றும் பாராமல் அவரை கொலை செய்து தேசபக்திதான் முக்கியம் என்பதை முன்னிறுத்தி வாழ்ந்து மறைந்த தியாக வரலாறு குறித்து எழுதி இருந்தார்.

அவரது இந்த கட்டுரை சிறந்த கட்டுரையாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து கட்டுரை போட்டியில் வென்ற மாணவி வைகயோஷனாவுக்கு மத்திய பாதுகாப்பு அமைச்சகம் வருகிற 26-ந்தேதி டெல்லியில் நடைபெற உள்ள குடியரசு தினவிழாவில் கலந்து கொள்ள அழைப்பு கடிதம் அனுப்பி உள்ளது. அந்த விழாவில் மாணவி வைகயோஷனாவுக்கு பதக்கம் மற்றும் ரூ.10 ஆயிரம் ரொக்கம் வழங்கப்பட உள்ளது.

இதையடுத்து மாணவி வைகயோஷனாவை பள்ளி தாளாளர், தலைமை ஆசிரியர், ஆசரிரியர்கள் பாராட்டினர். டெல்லி குடியரசு தினவிழாவில் தமிழகத்தில் இருந்து மொத்தம் 5 மாணவர்கள் கலந்து கொள்ள உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று மதுராந்தகத்தில் பிரதமர் மோடி பொதுக்கூட்டம்: இ.பி.எஸ்-கூட்டணி தலைவர்கள் பங்கேற்பு

சென்னை, ஜன.23: தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலை சந்திப்பதற்கு தீவிரமாகி உள்ள பா.ஜ.க. கூட்டணிபேச்சுவார்த்தைகளை தீவிரப்படுத்தி உள்ள நிலையில் தேர்தல் பிரசாரத்தையும் இப்போதே முடுக்கி விட்டுள்ளது.

இதன்படி பிரதமர் மோடி கலந்து கொள்ளும் பிரமாண்ட பொதுக் கூட்டத்துக்கு நாளை ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. சென்னையை அடுத்துள்ள மதுராந்தகத்தில் தேசிய நெடுஞ்சாலையையொட்டி உள்ள பகுதியில் பிரதமரின் கூட்டத்திற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. பிரதமர் பங்கேற்கும் கூட்டத்துக்காக 15 ஆயிரம் போலீசார் பாது காப்பு பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

பிரதமரின் வருகையை யொட்டி நேற்று காலையில் இருந்தே டெல்லியில் இருந்து சென்னை வந்துள்ள மத்திய பாதுகாப்பு படை போலீசார் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தை தங்களது முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்தில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நாளை காலையில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பிரதமர் மோடி அங்கிருந்து மதியம் 1.15 மணிக்கு தனி விமானத்தில் சென்னைக்கு வருகிறார்.

சென்னை விமான நிலையத்தில் இருந்து மதியம் 2.15 மணிக்கு ஹெலிகாப்டரில் புறப்பட்டு மதுராந்தகத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தை சென்றடைகிறார். அங்கு பா.ஜ.க. மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் பிரதமரை வரவேற்கிறார்கள். இதன் பிறகு பிரதமர் மோடி தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசுகிறார். பிரதமர் பங்கேற்கும் இந்த கூட்டத்தில் அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள தலைவர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பா.ம.க. தலைவர் அன்புமணி, அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் மற்றும் கூட்டணியில் இடம் பெற்றுள்ள சிறிய கட்சிகளை சேர்ந்த அனைத்து தலைவர்களும் மேடையில் தோன்றுகிறார்கள். அவர்கள் அனைவருடனும் பிரதமர் மோடி ஒன்றாக கையை உயர்த்தி காண்பிக்கிறார். இதன் மூலம் தமிழகத்தில் அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியின் பலத்தை காட்டவும் தமிழக பா.ஜ.க. தலைவர்கள் முடிவு செய்து இருக்கிறார்கள்.

பிரதமர் வருகையையொட்டி மதுராந்தகம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் உச்சக்கட்ட பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. சென்னையில் இருந்து தென் மாவட்டங்கள் நோக்கி செல்லும் தேசிய நெடுஞ்சாலை என்பதால் நாளை பிற்பகலில் பாதுகாப்பு காரணங்களை கருத்தில் கொண்டு அந்த வழியாக போக்குவரத்தும் தடை செய்யப்பட உள்ளது.

தேசிய நெடுஞ்சாலையில் செல்லும் வாகனங்கள் மாமண்டூர் மற்றும் மாமல்லபுரம் வழியாக திருப்பி விடப்படும் என போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

பிரதமர் வருகையையொட்டி சென்னை விமான நிலையத்தில் இருந்து மதுராந்தகத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் வரையில் பாதுகாப்பு ஒத்திகையும் நடத்தப்பட்டு உள்ளது. சென்னை விமான நிலையத்தில் இருந்து ஹெலிகாப்டரை இயக்கி பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் அருகில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிபேடில் இறக்கி பாதுகாப்பு அதிகாரிகள் ஒத்திகை பார்த்தனர்.

அந்த பகுதி முழுவதுமே மத்திய பாதுகாப்பு படையினரும், போலீசாரும் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள்.

தமிழ்நாடு 2026 தேர்தலுக்கான விசில் ஊதப்பட்டுவிட்டது- காங்கிரஸ் நிர்வாகி பிரவீன் சக்கரவர்த்தி

சென்னை, ஜன.23: விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்திற்கு 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான அதிகாரப்பூர்வத் தேர்தல் சின்னமாக விசில் சின்னத்தை இந்திய தேர்தல் ஆணையம் ஒதுக்கியுள்ளது.

இந்நிலையில், தவெககட்சிக்கு விசில் சின்னம் ஒதுக்கப்படடு விட்டதை குறிக்கும் வகையில் காங்கிரஸ் கட்சியின் தரவுப் பகுப்பாய்வுப் பிரிவு தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி பதிவு வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து பிரவீன் சக்கரவர்த்தி தனது எக்ஸ் தள பக்கத்தில்,"

தமிழ்நாடு 2026 தேர்தலுக்கான விசில் ஊதப்பட்டு விட்டது.

இப்போது அனைத்துக் கட்சிகளும் தேர்தல் ஓட்டத்திற்கு தயாராரி விட்டன" என ஆங்கிலத்தில் பதிவிட்டுள்ளார்.

ஏற்கனவே விஜயுடன் சந்திப்பு, ஆதரவுக் கருத்து என சர்ச்சை கிளப்பியவர் பிரவீன் சக்கரவர்த்தி என்பது குறிப்பிடத்தக்கது

கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யத்திற்கு டார்ச் லைட் சின்னம் ஒதுக்கீடு

சென்னை, ஜன.23: மக்கள் நீதி மய்யம் முதன்முதலில் களம் கண்டபோது அவர்களுக்கு 'டார்ச் லைட்' சின்னம் ஒதுக்கப்பட்டது.

சின்னம் எந்தெந்த தொகுதிகளில் பயன்படுத்தப் படும் என்பது கூட்டணிக் கட்சிகளின் தொகுதிப் பங்கீட்டைப் பொறுத்தே அமையும்.

கமல்ஹாசனின் தலைமை யிலான மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான அதிகாரப்பூர்வ தேர்தல் சின்னமாக மீண்டும் டார்ச் லைட் சின்னத்தை இந்திய தேர்தல் ஆணையம் ஒதுக்கீடு செய்துள்ளது.

2019 மக்களவைத் தேர்தலில்

மக்கள் நீதி மய்யம் முதன்முதலில் களம் கண்டபோது அவர்களுக்கு 'டார்ச் லைட்' சின்னம் ஒதுக்கப்பட்டது.

தற்போதைய அரசியல் சூழலில், மக்கள் நீதி மய்யம் திமுக தலைமையிலான கூட்டணியில் இணைந்துள்ளதால், வரும் தேர்தல்களில் இந்தச் சின்னம் எந்தெந்த தொகுதிகளில் பயன்படுத்தப்படும் என்பது கூட்டணிக் கட்சிகளின் தொகுதிப் பங்கீட்டைப் பொறுத்தே அமையும்.

"யாருடன் கூட்டணி என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை"

பிரேமலதா தகவல்

சென்னை,ஜன.23: யாருடன் கூட்டணி என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தேமுதிகபொதுச்செயலாளர் பிரேமலதாவிஜயகாந்த்சென்னை கோயம்பேட்டில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் உள்ள விஜயகாந்த் நினைவிடத்தில் நேற்று மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

தேர்தல் கூட்டணி தொடர்பாக பியூஷ் கோயல் எங்களுடன் பேசி வருவதாக சில தொலைக்காட்சிகளில் செய்திகள் வந்தன. ஆனால், அது தொடர்பாக எங்களுக்கே தகவல் வரவில்லை. அந்தச் செய்தியில் ஒரு சதவீதம் கூட உண்மை இல்லை. பியூஷ் கோயல் ஏன் வந்திருக்கிறார், கட்சி தொடர்பான கூட்டமா கூட்டணி தொடர்பான கூட்டமா என்று கூட தெரிய வில்லை.

நான் ஏற்கெனவே கூறியது போல எங்கள் மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகளை கலந்தாலோசித்து கூட்டணி

குறித்து அறிவிப்பேன். வரும் 24-ம் தேதி முதல் 2-ம் தேதி வரை, 'உள்ளம் தேடி இல்லம் நாடி மக்களைத் தேடித் தலைவர்' சுற்றுப்பயணத்தை நான்காம் கட்டமாக நடத்த உள்ளோம். கூட்டணி என்பது சம்பந்தப்பட்ட கட்சிகளுடன் ஆலோசித்து, பின் இரு தரப்பிலும் அறிவிக்கும் போது தான் அது அதிகாரபூர்வமானது.

இன்னும் தேமுதிக யாருடன் கூட்டணி என்பதை முடிவு செய்யவில்லை. எங்கள் மாவட்டச் செயலாளர்கள் உடனான கலந்தாலோசனை தான் முடிந்திருக்கிறது.

ஒரு அண்ணியாக இல்லாமல் ஒரு அம்மாவாக மிக மிகப் பொறுப்புடன் நான் இருக்கிறேன். யாருடன் இறுதியாக கூட்டணி அமைக்க போகிறோம் என்பதை உரிய நேரத்தில் எங்கள் மாவட்டச் செயலாளர்களை மீண்டும் அழைத்துப் பேசி எங்கள் முடிவைச் சொல்வோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

"புத்தகங்கள் வாழ்க்கையை உன்னதமாக்கும்" நீதிபதி ஆர்.மகாதேவன் நெகிழ்ச்சி

சென்னை, ஜன.23: புத்தகங்கள் வாழ்க்கையை உன்னதமாக்கும், தொடர் வாசிப்பு அறிவை அகலப் படுத்தும் என்று சென்னை புத்தக காட்சி நிறைவுவிழாவில் உச்ச நீதிமன்ற நீதிபதி ஆர்.ம காதேவன் கூறினார்.

தென்னிந்திய புத்தக விற் பனையாளர் மற்றும் பதிப் பாளர் சங்கம் (பபாசி) சார்பில் 49-வது சென்னை புத்தக காட்சி ஜனவரி 8-ம் தேதி தொடங்கி நேற்றுடன் முடிவடைந்தது. சுமார் ஆயிரம் அரங்குகள் இடம்பெற்ற இந்த புத்தக காட் சியை 13 லட்சத்துக்கும் மேற்பட் டோர் பார்வையிட்டுள்ளனர்.

புத்தக காட்சி நிறைவு விழா நேற்று மாலை நடைபெற்றது. இதில் உச்ச நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன் சிறப்பு விருந் தினராக கலந்துகொண்டு பதிப்புத் துறையில் 25 ஆண்டு கள் பணிநிறைவு செய்த பணி யாளர்களுக்கு விருது வழங்கி கவுரவித்தார்.

அவர் பேசியதாவது: மொழி, கலாச்சாரம், சிந்தனை இவை அனைத்தும் நமது முன்னோர் கள் அடுத்த தலைமுறைக்கு கொண்டு வந்து சேர்த்தவை. தமிழ் மொழி 3 ஆயிரம் ஆண்டு பழமையான மூத்த மொழி. ஞானத்தை வாரி வழங்கிய

மொழி. பழந்தமிழ் படைப் புகள் தமிழின் உன்னதத்தை எடுத்துக்காட்டுகின்றன.

தமிழில் கோடிக்கணக் கான படைப்புகள் உள்ளன. அவற்றில் முதன்மையானது திருக்குறள், அடுத்தது கம்பரா மாயணம் என்கிறார் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை. தொல்காப்பியம் வெறும் தமிழ் இலக்கண நூல் அல்ல, அது தமிழ் மண்ணின் வாழ்வை எடுத்துரைக்கும் நூல். தமிழ் ஏன் சிறந்த மொழி, அதை ஏன் உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்பதற்கும் தமிழில் இலக்கி யங்களில் காரணங்கள் சொல் லப்பட்டுள்ளன.

அதில் அறிவின் உச்சத்தை காணலாம். இன்றைய இயந் திர உலகில், தமிழ்ச் சமூகம் தமிழ் மொழியையையும், தமிழ்க் கலாச்சாரத்தையும் அடுத்த தலைமுறைக்கு கடத்த வேண்டும் என்பதுதான் இன் றைய அடிப்படை தேவை. அறிவியல், மருத்துவம், தத் துவம்என அனைத்து துறை கள் குறித்தும் தமிழில் குறிப் பிடப்பட்டுள்ளன.

தமிழ் படைப்புகளை தேடிப் பிடித்து நமக்கு பதிப்பித்து தரு கிறார்கள் பதிப்பகத்தினர். பதிப்பக பணி ஓர் உன்னத மாக பணி. புத்தகங்கள் வாழ்க் கையை உன்னதமாக்கும். புத் தகத்தை தலை குனித்து படித் தால் அது நம்மை தலை உயர்த் தச் செய்யும். தொடர் வாசிப்பு அறிவை அகலப்படுத்தும். புத் தகங்களை நேசித்தலும், அவற்றை சிறிது நேரத்தை செலவிடுதலும் நம்மை மேலும் உணர்த்தும் என்று அவர் கூறினார்.

தெலுங்கானாவில் விஷம் குடித்து 15 குரங்குகள் பலி



காமரெட்டி, ஜன.23: தெலங்கானா மாநிலம் காமரெட்டி மாவட்டத்தில் மர்ம நபர்கள் கொடுத்த விஷத்தை குடித்து 15 குரங்குகள் உயிரிழந்தது. மேலும் இந்த சம்பவத்தில் 80 குரங்குகள் மயக்கமடைந்து கவலைக்கிடமான முறையில் சிகிச்சை பெற்று வருகிறது.

குரங்குகள் உயிரிழந்து கிடந்ததை பார்த்த உள்ளூர் மக்கள் கால்நடை மருத்துவருக்கு தகவல் கொடுத்துள்ளனர். இதனையடுத்து உயிருக்கு போராடிய குரங்குகள் சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டன.

மர்ம நபர்கள் குரங்குகளை இங்கு கொண்டு வந்து விஷம் வைத்து கொன்றதாக உள்ளூர் மக்கள் தெரிவித்தனர்.

பாடகி ஜானகியின் ஒரே மகன் உயிரிழப்பு... திரையுலகினர் இரங்கல்!

பெங்களூரு,ஜன.23: "தென்னிந்தியாவின் நைட்டிங்கேல்"என ரசிகர்களால் அன்புடன் அழைக்கப்படுபவர் பாடகி எஸ்.ஜானகி. இவரின் ஒரே மகன் முரளி கிருஷ்ணா நேற்று காலமானார். நீண்ட நாட்களாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று இந்த துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது. முரளி கிருஷ்ணாவுக்கு ஒரு மனைவி, இரண்டு மகள்கள் உள்ளனர். பாடகி ஜானகியின் மகன் என்பதைத் தாண்டி, பிரபலமான பரதநாட்டிய கலைஞர் என்ற பட்டத்தையும் பெற்றவர். சில படங்களிலும் நடித்துள்ளார்.

இந்த செய்தியை பாடகி கே.எஸ். சித்ரா சமூக ஊடகங்களில் அறிவித்துள்ளார். முரளியின் திடீர் மரணச் செய்தியை கேட்டு தான் அதிர்ச்சியடைந்ததாகவும், அன்பாக சகோதரரை இழந்துவிட்டதாகவும் தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

"நேற்று காலை எங்கள் அன்புக்குரிய ஜானகி அம்மாவின் ஒரே மகன் முரளி அண்ணாவின் திடீர் மறைவுச் செய்தியைக் கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். நாங்கள் ஒரு அன்பான சகோதரனை இழந்துவிட்டோம். இந்த தாங்க முடியாத வலியையும் துக்கத்தையும் கடக்கும் வலிமையை அம்மாவுக்கு கடவுள் வழங்கட்டும். மறைந்த ஆன்மா நித்திய சாந்தியில் இளைப்பாறட்டும். ஓம் சாந்தி" என்று கே.எஸ். சித்ரா அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ராமதாஸ் அவசரக் கூட்டம் - கூட்டணியை முடிவு செய்ய முடியாமல் திணறல்

விழுப்புரம், ஜன.23: திண்டிவனம் அருகே தைலாபுரத்தில் அவசர நிர்வாகக் குழுக் கூட்டம் நேற்று திடீரென கூடியது. நிர்வாக குழு உறுப்பினரும், இணை பொதுச் செயலாளருமான அருள் எம்எல்ஏ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்துக்கு முன்பாக செய்தியாளர்களிடம் பேசிய அருள் எம்எல்ஏ, "தமிழகத்தில் 40 தொகுதிகளில் போட்டியிடும் தொகுதிகளை நிறுவனர் ராமதாஸ் தேர்வு செய்துள்ளார். கூட்டணி குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் ராமதாஸுக்கு வழங்கப்பட்டுள்ளது. வெற்றிக் கூட்டணி அமைப்பார். அவர் இடம்பெறும் கூட்டணியில் இருப்பவர்தான் முதல்வர் பதவி ஏற்பார்.

தேசியஜனநாயககூட்டணியில் இணைவதற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதா? மற்றும் மோடி பங்கேற்கும் கூட்டத்துக்கு அழைப்பு கொடுக்கப்பட்டதா? என்பதை ராமதாஸிடம்தான் கேட்க வேண்டும். நான் எதுவும்

கருத்து சொல்ல முடியாது.

தேர்தல் தேதி அறிவிப்புக்கு 40 நாட்கள் உள்ளன. பொறுமையாக முடிவு செய்யலாம். ராமதாஸிடம் இருந்து அவசரமாகவரச்சொல்லி நிர்வாக குழு உறுப்பினர்கள் 18 பேருக்கு அழைப்பு வந்தது. அதனால் வந்துள்ளோம். ஊடகத்திடம் சொல்ல முடியாத சில விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்படும்" என்றார்.

ஜனவரி 18-ம் தேதி நிர்வாக குழுக் கூட்டம் நடைபெற்றுள்ள நிலையில், இரு நாள் இடைவெளியில் 2-வது நிர்வாகக் குழுக் கூட்டத்தை ராமதாஸ் நடத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது. திமுககூட்டணியில் இணைவதற்கு விசிக எதிர்ப்பு தெரிவிப்பதால், கூட்டணி குறித்து முடிவெடுக்க முடியாமல் ராமதாஸ் திணறி வருவதாக கூறப்படுகிறது.

குடும்ப 'வாட்ஸ்அப்' குழுவில் தகவல் பதிவிட்டு தற்கொலை செய்த தாய்-மகள்

திருவனந்தபுரம்,ஜன.23: கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே உள்ள பூந்துறை ஆரியன்குழி பகுதியை சேர்ந்தவர் ராஜீவ். இவரது மனைவி சஜிதா (வயது 54). இவர்களது மகள் கிரேஷ்மா (30).

கிரேஷ்மாவுக்கும், பழஞ்சிரா பகுதியை சேர்ந்த உன்னிகிருஷ்ணன் என்பவருக்கும் கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. திருமணம் முடிந்ததில் இருந்தே கணவன்-மனைவிக்கிடையே பிரச்சனை ஏற்பட்டபடி இருந்துள்ளது.

இதனால் திருமணமான 29 நாட்களிலேயே கணவன்-மனைவி இருவரும் பிரிந்து விட்டனர். கிரேஷ்மா தனது பெற்றோரின் வீட்டுக்கு வந்துவிட்டார். அவரது கணவர் உன்னி கிருஷ்ணன் வெளிநாட்டில் வேலைபார்த்ததால், அவர் அங்கு சென்றுவிட்டார்.

கணவன்-மனைவி இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தாலும், இருவரது குடும்பத்தினருக்கிடையே பிரச்சனை நடந்தபடியே இருந்திருக்கிறது. இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு கிரேஷ்மாவின் தந்தை ராஜீவ்

இதயக்கோளாறு காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார்.

அதன்பிறகு அவர் தனது தாயுடன் வசித்து வந்தார். மகளை, அவரது கணவருடன் எப்படியாவது சேர்த்து வைத்துவிட வேண்டும் என்று சஜிதா விரும்பினார். இந்தநிலையில் உன்னி கிருஷ்ணனின் உறவினர் ஒருவர் இறந்து விட்டார். அவரது இறுதிச் சடங்கில் கிரேஷ்மா மற்றும் அவரது தாய் சஜிதா ஆகிய இருவரும் பங்கேற்றனர்.

அங்கு வந்திருந்த உன்னி கிருஷ்ணனின் குடும்பத்தினரிடம் இருவரும் பேசியுள்ளனர். அப்போது கிரேஷ்மா மற்றும் அவரது தாயை, உன்னிகிருஷ்ணன் கடுமையான வார்த்தைகளால் திட்டியதாக கூறப்படுகிறது. அதனைக்கேட்டு கிரேஷ்மாவின் தாய் சஜிதா அந்த இடத்திலேயே மயங்கி விழுந்துவிட்டார்.

இதனால் துக்க வீட்டில் பரபரப்பு ஏற்பட்டது. அங்கிருந்த வர்கள் ஆசுவாசப்படுத்தியதால் சிறிது நேரத்திற்கு பிறகு சஜிதா விழித்தெழுந்தார். அதன்பிறகு தாய்-மகள் இருவரும் தங்களின் வீட்டுக்கு வந்துவிட்டனர். துக்க வீட்டில் உன்னி கிருஷ்ணன் கடுமையான வார்த்தைகளால் திட்டியது கிரேஷ்மா மற்றும் அவரது தாய்க்கு மனவேதனையை ஏற்படுத்தியதாக தெரிகிறது.

இதனால் அவர்கள் இருவரும் தற்கொலை செய்துகொள்ள முடிவெடுத்துள்ளனர். இதையடுத்து கிரேஷ்மா மற்றும் அவரது தாய் ஆகிய இருவரும் தற்கொலை செய்து கொள்ளப்போவதாக தங்களின் குடும்ப வாட்ஸ்-அப் குழுவில் தகவல் பதிவிட்டனர்.

மேலும் தங்களின் சாவுக்கு காரணம் உன்னி கிருஷ்ணன் தான் எனவும், அவர் கிரேஷ்மாவை துன்புறுத்தியதன் காரணமாகவே இந்த முடிவை எடுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தனர். அதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அவர்களது குடும்பத்தினர், சஜிதாவின் வீட்டுக்கு வந்தனர். அப்போது அங்கு தாய்-மகள் இருவரும் வீட்டுக்குள் பிணமாக கிடந்தனர். இது குறித்து போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அதன் பேரில் பூந்துறை போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து இருவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு திருவனந்தபுரம் மருத்துக்வக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

கிரேஷ்மா மற்றும் அவரது தாய் சஜிதா ஆகிய இருவரும் சயனைட் சாப்பிட்டு தற்கொலை செய்துள்ளனர். கிரேஷ்மாவின் கணவர் குடும்பத்தினருடன் ஏற்பட்ட பிரச்சனை காரணமாகவே தாய்-மகள் இருவரும் தற்கொலை செய்திருப்பது போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843

Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்..
மாதமிருமுறை பக்தி இதழ்
www.arultharumdeivam.com
ManjalMart
ORDER
NOW
3
CALENDAR
RS.100
MANJALMART.COM
9337501889
7789941009

THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ...
Residential / Commercial ...
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call :7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE
Digital
Marketing
Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF
SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK
GUARANTEE

Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599

Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com

Sri ManjalMart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash
& Detailing
* Car Foam Pressure Wash
* Teflon Coating
* Ceramic Wax Treatment
* Under Chassis Painting
* Interior Foam Wash / Stain Remover
* Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500
per day
Work From Home
Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000
per month
9337501889
7789941009

அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..

S.R
Call Drivers
Travels
Man Power & All Vehicle Available
24 Hours
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

Breaking
NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY

ADVERTISE
WITH US
CONTACT US
9438610756

Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009

கவிதை அரங்கம்!

முயற்சி இருந்தால்
செல்லும் பாதை
எல்லாம் நாம்
வெல்லும் பாதை தான்

ஏளனமாக பேசியவர்களை
ஏணியாக வைத்துக்கொள்
உன் வாழ்க்கை
எட்டமுடியாத
தூரத்தில் சென்று விடும்

விழுவது உங்கள்
கால்களாக இருந்தால்
எழுந்து ஓடுவது
உங்கள் மனமாக
இருக்கட்டும்

தனிமையான
அமைதி தான்
நீ யார்
என்று உனக்கு
அறிமுகம் செய்யும்

வாழ்க்கை தத்துவம்...

வாழ்க்கை ஒரு நடனம்
இசை எது வந்தாலும்
அதை அழகாக
ஆடி முடிக்க தெரிந்திருக்க வேண்டும்

வாழ்க்கை வாழ்வதற்கே
வெற்றியை தேடுவதற்கே
தோல்வியை பயப்படாமல்
எதிர்கொள்வதற்கே

பொறாமை உள்ளவனுக்கு
சந்தோஷம் என்பது
ஒரு கனவு மட்டுமே

பயம் இல்லாமல்
செயல்படுபவர்கள் தான்
வெற்றியை அசைக்க முடியும்

மிட்டாய்....

"அக்கா....
சாவித்திரிக்கா,
நேத்தே சொன்னல்ல
எனக்கு பொறந்த
நாளு எல்லோருக்கும்
சாக்லேட் வாங்கனும்
காசு ரெடி பண்ணுன்னு
சொன்னேல்ல"
"அம்மா தா தரலையே
அப்பாவும் வேலைக்கு
போனவரு வரல காசு எப்படி
கிடைக்கும்"
அக்கா சொல்ல
"அப்போ என் பொறந்த
நா கொண்டாட முடியாதா
எல்லோருக்கும் சாக்லேட்
கொடுக்க முடியாதா
என தங்கை சங்கீதா
சொல்வதைத் கேட்ட
சாவித்திரி
"அப்பத்தாட்ட கேட்கலாமா...
அம்மாவுக்கும்
அப்பத்தாவுக்கும்
சண்டைநால அம்மா
அப்பத்தாகிட்டே
பேசக் கூடாது ன்னு
சொன்னாங்களே
இப்போ காசுக்கு யார்
கிட்டே போய் கேட்பது" என
யோசிக்க
"என்னக்கா யோசிக்கிறே"
சங்கீதா கேட்க
"அப்பாத்தா கிட்டே
கேட்கலாம் ஆனா நீ அம்மா
கிட்டே சொல்வியே"ன்னு
சொல்லவும்
"இல்லக்கா...
சொல்லமாட்டேன்"
அப்படித்தா சொல்வே "சரி
வா அம்மா அடிச்சாலும் ஒரு
தடவதானே அடிப்பாங்க
"என தனக்குள் சொல்லிக்
கொண்டே
இருவரும் நடந்து போகும்
போது
கல் காலில் இடறிவிட
குனிந்து பார்த்தாள்
சாவித்திரி
மடிப்பா நூறு ரூபாய் பணம்
ஒன்று கீழே கிடப்பதைப்
பார்த்தவள்
சுற்றும் முற்றும் பார்த்தவள்
யாரும் இல்லாத தால்
குனிந்து பணத்தை
எடுத்தாள் விரித்தாள் "நூறு
ரூபாய் பணம்
"அய்...பணம் நிறைய
சாக்லேட் வாங்கலாம்" என
சங்கீதா குதித்தாள்
"வாக்கா..கடைக்கு
போகலாம் "என சங்கீதா
பரபரத்தாள்
"யார் பணமுன்னு
தெரியலையே" என திரும்பிப்
பார்க்க
கடையருகே குழந்தையோடு
நின்றிருந்த ஒரு அம்மா
கீழேயே குனிந்து
குனிந்து எதையோ தேடிக்
கொண்டிருப்பதைப் பார்த்த
சாவித்திரி வேகமாக வந்தாள்
அந்த அம்மா அருகில் வந்து
"என்ன தேடுறீங்க " என
கேட்க
"குழந்தைக்கு பால் வாங்க
பணம் கொண்டு வந்தேன்
காணாம் அதா கீழே எங்க
விழுந்துச்சோ ன்னு தேடுறே
"ன்னு சொல்ல ,
"இந்தாங்க இது தானா
பாருங்கன்னு" கொடுக்க,
வாங்கிப் பார்த்ததும்
"ஆமாத்தா...இந்த நூறு ரூபா
தா, எங்கேம்மா கிடைச்சது "
அதோ...அங்கே ன்னு
சொல்ல
"அக்கா.. சாக்லேட்
வாங்கலாம்ன்னு
சொன்னேன்ல நீ?கீழே
எடுத்த பணத்தே அவங்க
கிட்டே கொடுத்துட்டே"ன்னு
சங்கீதா சொல்ல
"ஏய்...அது அவங்க காசு
அத நாம தொடக்கூடாது
உரியவரிடம் சேர்க்கனும்னு
டிச்சரம்மா சொன்னாங்கல்ல"
என்று சங்கீதா விடம் சொல்ல
என்னம்மா வேணும்
எனக் கேட்க "இவளுக்கு
பொறந்தநா மிட்டாய்
வாங்கலாம்ன்னு "
"மிட்டாய் இல்லே சாக்லேட்
வேணும்"
"சாக்லேட் இல்லபாப்பா
ஆரஞ்சு மிட்டாய் இருக்கு
தரவான்னு கேட்க
"ஆரஞ்சு மிட்டாயே பத்து
ரூபாய்க்கு கொடுங்க"ன்னு
சொல்ல
"சங்கீதா ஹாப்பி
பர்த்டே "ன்னு கடைக்காரர்
கொடுத்த ஆரஞ்சு மிட்டாயை
வாயில் வைத்து வாழ்த்து
சொன்னாள்
" இந்தா மீதி மிட்டாயை
எல்லாத்துக்கும் கொடு
"என்றால் சாவித்திரி
ஆரஞ்சு மிட்டாயை சப்பிய
சங்கீதா "அக்கா நல்ல
இனிப்பா இருக்கு இந்தா
உனக்கு ஒண்ணு"
அவங்களுக்கு என்று
சொல்ல
"இந்தாங்க எனக்கு பொறந்த
நாளு மிட்டாய் சாப்பிடுங்க"
என்று சொல்ல எல்லோரும்
சிரித்தனர்

நல.ஞானபண்டிதன்
திருப்புவனம் புதூர்

சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

"டாக்டர் பத்து நாளா ஒரே கனவா வருது!"

"கனவு தானே வருது... அதனாலென்ன?"

"இல்ல டாக்டர். இடை இடையே இந்தக் கனவை உங்களுக்காக வழங்குபவர்கள்னு விளம்பரம் வேற வருதே!"

தினம் ஒரு சமையல்

கொத்தமல்லி & கறிவேப்பிலை சட்னி

தேவையான பொருட்கள்:

கொத்தமல்லி	- 1 கட்டு (சிறியது)
கறிவேப்பிலை	-1 கப்
இஞ்சி	- சிறிய துண்டு
பூண்டு	- 3 பல்
வெங்காயம்	- 1 பெரியது
தக்காளி	- 1பெரியது
பச்சை மிளகாய்	- 2
உப்பு	-தேவையானவை
எண்ணெய்	- தேவையானவை
பெருங்காயம்	- 1/4 சிட்டிகை

தாளிக்க :

கடுகு,உளுந்து	- 1/4 தேக்கரண்டி
காய்ந்த மிளகாய்	-1
பெருங்காயம், கறிவேப்பிலை	

செய்முறை:

* கடாயில் எண்ணெய் விட்டு அதில் நறுக்கிய வெங்காயம்,தக்காளி சேர்த்து வதக்கவும்.பின்பு இஞ்சி,பூண்டு சேர்த்து அதனுடன் கொத்தமல்லி,கறிவேப்பிலை ,பச்சை மிளகாய் சேர்த்து நன்றாக வதக்கவும்.
* நன்றாக ஆரிய பிறகு உப்பு சேர்த்து அரைக்கவும் .
*கடைசியில் தாளித்து இறக்கவும் .
*சுவையான கொத்தமல்லி& கறிவேப்பிலை சட்னி தயார் .

பிரண்டை பயன்கள்

உணவே மருந்து என்ற அடிப்படையில் நம் முன்னோர்கள் நம்மைச் சுற்றி விளையக்கூடிய பல்வேறு மருத்துவ குணமிக்க காய்கள், பழங்கள், கீரைகள், தண்டுகள் வேர்கள் என பல்வேறு தாவர இனங்களையும் உணவாக சமைத்து உண்டு, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளனர். அந்த விதத்தில், நாம் மறந்துவிட்ட ஒரு மருத்துவ குணமிக்க தாவரம்தான் பிரண்டை! பிரண்டையின் மருத்துவ குணங்கள் மற்றும் அதன் மகத்துவங்களை உமையாள் பாட்டியிடம் கேட்டு அறிந்துகொள்ள தொடர்ந்து படியுங்கள்!

லாக் டவுன் தளர்வுகள் செய்யப்பட்டபின் இப்போது அடிக்கடி உமையாள் பாட்டியைப் பார்க்கும் வாய்ப்பு கிடைப்பது மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கிறது.

“இப்பல்லாம் மக்கள் கொரோனாவோட வாழப் பழகிட்டாங்க... இல்ல பாட்டி?!” பாட்டியிடம் கேட்டபடியே வீட்டின் நிலை வாசலைக் கடந்து உள்ளே நுழைந்து அடுப்பங்கரையை அடைந்தேன். பாட்டி வழக்கம் போல வடச்சட்டியில் நெய்விட்டு எதையோ மும்முரமாக வதக்கிக் கொண்டிருந்தாள். தன் கையிலிருந்த பாத்திரத்தை “இந்தா பிடி...!” என்றபடி என்னிடம் ஒப்படைத்த பாட்டியிடம்,

“என்ன பாட்டி... இந்திய கேப்டன் ரஹானே வெற்றிக் கோப்பையை நம்ம யார்க்கர் கிங் நடராஜன் கிட்ட கொடுத்து அழகு பாக்குற மாதிரி, இந்த கிண்ணத்தை எங்கிட்ட தர்றீங்க?!” என்று குறும்பாக கேட்டேன்.

“இது வெற்றிக் கோப்பையெல்லாம் இல்ல, இது பிரண்டைய உறிச்ச தோல் கழிவு, இதைப் போயி கொல்லப்புறத்துல செடிகளுக்கு கீழப் போட்டு வாப்பா, உரமாகும்!” என்றபடி என்னை அனுப்பினாள்.

பாட்டி பிரண்டை சட்னியை தயார்செய்யத் தொடங்க, நானும் சில இட்லிகளை அங்கேயே உண்டுவிட்டு காலை உணவை முடித்துக்கொள்ள ஆர்வமானேன்.

பாட்டியின் பிரண்டை சட்னி சுவையாக இருந்ததால், ஆறேழு இட்லிகளுக்கும் மேல் இரைப்பைக்குள் ஐக்கியமாகின.

“இந்த பிரண்டை சட்னி ரொம்ப டேஸ்டா இருக்கு பாட்டி! இது எப்படி வைக்கணும்னு சொல்லுங்க... எங்க அம்மாகிட்ட சொல்லி அடிக்கடி வைக்க சொல்றேன்” என்று பாட்டியிடம் சமையல் குறிப்பை கேட்ட எனக்கு, பாட்டியிடமிருந்து பிரண்டையின் மருத்துவ குணங்கள் என்னென்ன என்று தெரிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

“பிரண்டை சட்னி எப்படி வைக்கணும்னு உங்க அம்மாவுக்கு ஏற்கனவே தெரியும். ஆனா பிரண்டையில என்னென்ன மருத்துவ குணம் இருக்குன்னு இப்ப நீ தெரிஞ்சுக்கோ! அதான் ரொம்ப முக்கியம், அப்பதான் நீ மார்க்கெட்டுக்கு போகும்போதெல்லாம் பிரண்டைய வாங்கி வருவ. நீ வாங்கி குடுத்தாதான் வீட்ல உள்ளவங்க செஞ்சு தருவாங்க!”

“பிரண்டை அல்லது வச்சிரவல்லி'ன்னு சொல்லப்படுற இது மருத்துவ பயன்பாடுடைய தாவரம். இந்த கொடித் தாவரம் சாதாரணமா வேலியோரமா வளரும். பிரண்டையில ஓலைப் பிரண்டை, உருண்டைப் பிரண்டை, சதுரப் பிரண்டை, களிப் பிரண்டை, இனிப்புப் பிரண்டை, புளிப்புப் பிரண்டை, முப்பிரண்டை எனப் பலவகை இருக்கு.

சினிமாவை விடுங்க, இதிலும் விஜய் தான் இந்திய அளவில் NO.1.. முழு விவரம்

நடிகர் விஜய் தனது கெரியரின் உச்சத்தில் இருக்கும் போதே முழு நேர அரசியலில் களமிறங்குவதாக அறிவித்து புது கட்சி தொடங்கிவிட்டார். ஜனநாயகன் படத்திற்கு அவர் 200 கோடி ரூபாய் சம்பளம் வாங்கியது குறிப்பிடத்தக்கது.

இந்த வருடம் நடக்க இருக்கும் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் அவர் கட்சி போட்டியிட இருக்கிறது. அதற்கான பணிகள் ஒரு பக்கம் நடக்க, விஜய் பங்கேற்ற கரூர் பிரச்சார கூட்டத்தில் 41 பேர் கூட்ட நெரிசலில் பலியான சம்பவம் பற்றிய விசாரணைக்கும் விஜய் டெல்லி சிபிஐ அலுவலகத்தில் இரண்டு முறை ஆஜராகி இருந்தார்.

மேலும் விஜய்யின் கடைசி படமான ஜனநாயகன் சென்சார் தொடர்பான பிரச்சனையின் வழக்கும் தீர்ப்பு தேதி



தெரிவிக்காமல் ஒத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. இப்படி விஜய் பல்வேறு சிக்கல்களை சந்தித்து வருகிறார்.

இத்தனை சர்ச்சைகளுக்கு நடுவில் விஜய் இந்திய அளவில் ஒரு விஷயத்தில் நம்பர் 1 இடத்தை பிடித்து இருக்கிறார். ‘Most Talked about Indian Politicians’ என்ற பட்டியலை டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை வெளியிட்டு இருக்கிறது.

அந்த லிஸ்ட்டில் பிரதமர் நரேந்திர மோடியை முந்தி விஜய் தான் நம்பர் 1 இடத்தை பிடித்து இருக்கிறார். ஜனவரி 1 – 15ம் தேதி வரையிலான புள்ளி விவரம் இது என தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

நடிகர் சூர்யாவின் மகனா இது! எப்படி வளர்ந்துவிட்டார் பாருங்க...

சினிமா

மீனாட்சி சவுத்ரி சேலையில் அழகிய போஸ் கொடுத்து இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார். அது ரசிகர்களை கவர்ந்து வருகிறது. இதோ பாருங்க.

தமிழ் சினிமாவில் முன்னணி ஹீரோவாக வலம் வருபவர் சூர்யா. இவர் நடிப்பில் அடுத்ததாக கருப்பு திரைப்படம் வெளிவரவுள்ளது.

வருகிற ஏப்ரல் மாதம் இப்படம் ரிலீஸாக அதிக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இதை தொடர்ந்து சூர்யா 46 மற்றும் 47 ஆகிய திரைப்படங்களை கைவசம் வைத்துள்ளார் நடிகர் சூர்யா.

இந்த இரண்டு படங்களின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. நடிகர் சூர்யா – நடிகை ஜோதிகா தம்பதிக்கு ஒரு மகள் மற்றும் ஒரு மகன் உள்ளனர் என்பதை நாம் அறிவோம்.

இந்த நிலையில், சமீபத்தில்

சூர்யாவுடன் அவருடைய மகன் தேவ் ISPL கிரிக்கெட் பார்க்க வந்துள்ளார். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது. நீங்களே பாருங்க, தேவ் எப்படி வளர்ந்துவிட்டார் என்று, இதோ...

(மே 2) ஸ்ரீராமானுஜர் ஜெயந்தி

ஸ்ரீராமானுஜர் ஸ்ரீபெரும்புதூரில் 1017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் திருவாதிரையில் ஆசூரி வம்சத்தில் கேசவப் பெருமாள் தீக்ஷிதருக்கும் காந்திமதி அம்மையாருக்கும் அனந்தன் அம்சமாக பிறந்தார்.
இவர் பிறந்த பன்னிரண்டாம் நாள் இவரது அம்மானான பெரிய திருமலை நம்பிகள் குழந்தை இலட்சுமணனர் போல் இருந்ததால் இவருக்கு இளையாழ்வார் என்ற பெயரைச் சூட்டினார். சன்னியாச ஆசிரம ஸ்வீகாரம் ஆனவுடன் தேவப் பெருமாள் சாதித்த பெயர் யுதிராஜர். திருவரங்கத்தில் அணியரங்கன் சூட்டிய பெயர் உடையவர். திருக்கோட்டியூர் நம்பியால் சூட்டப்பட்ட பெயர் எம்பெருமானார். ஆண்டாளின் திரு உள்ளத்திருந்த அவாவினை பூர்த்தி செய்ததால் அருளிய பெயர் கோயில் அண்ணன். ஸ்ரீபாஷயத்தைப் பூர்த்தி செய்தவுடன் சாரதா பீடத்தில் சரஸ்வதியினால் சாத்தப்பட்ட பெயர் ஸ்ரீபாஷ்யக்காரர்.

ராமானுஜர் தம் வாழ்நாளில் ஒன்பது சமஸ்கிருத நூல்களை இயற்றினார். அவை வேதார்த்த சங்கிரகம், ஸ்ரீபாஷ்யம், கீதா பாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த சாரம், சரணாகதி கத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம், ஸ்ரீரங்க கத்யம், நித்திய கிரந்தம் ஆகும்.

இவருடைய தந்தையே இவருக்கு ஆரம்பகால குருவாக இருந்தார். அவர் காலம் முடிந்த பிறகு யாதவ பிரகாசர் என்பவரிடம் பாடம் கற்க ராமானுஜர் சென்றார். குருவை மிஞ்சும் சீடரானார். அதனால் குருவே ராமானுஜரை காசிக்கு அழைத்துச் சென்று கங்கை நீரில் தள்ளிக் கொலை செய்ய நினைத்தார். அப்போது வேடுவன் வேட்டுச்சியாக வந்த பெருமாளும் தாயாருமே அவருக்கு காஞ்சி செல்ல வழி காட்டியதாக கூறுவார்கள்.

ஆஜானுபாகுவாக ஆறடி உயரமும் தோற்றப் பொலிவும் கொண்ட ராமானுஜர் தலைவர்க்குரிய அருங்குணங்கள் யாவும் நிரம்பப் பெற்றவர்.

ராமானுஜர் ஸ்ரீரங்கத்தில் இருந்த காலகட்டத்தில் அதன் நிர்வாகத்தை சீர்மைப்படுத்தினார். நேரம் காலம் தவறாமல் பூஜைகள் நடைபெற பூஜா காலங்களை முறைப்படுத்தினார்.பல குழுக்களை அமைத்து அதற்கு தமது சீடர்களையே தலைவர்களாக அமர்த்தினார் இந்த கட்டு திட்டங்களை விரும்பாத சிலர் ராமானுஜரை ஒழிக்க திட்டமிட்டனர். இதிலிருந்து ராமானுஜர் தப்பினார்.

மனிதர் அனைவரும் சமம் என்ற சமத்துவக் கொள்கையை கொண்டவர் ராமானுஜர். இவர் யமுனாசாரியாரின் சீடரான திருக்கோஷ்டியூர் நம்பியிடம் திருவட்டெழுத்து மந்திரத்தைக் கற்க விரும்பினார்.

இதற்காக அவர் பதினெட்டு முறை ஸ்ரீரங்கத்திலிருந்து திருக்கோட்டியூருக்கு சலிக்காமல் முகம் சுளிக்காமல் நடையாக நடந்தாராம்.

அவரும் எவரிடமும் இந்த மந்திரத்தை வெளியிட்டு விடக்கூடாது என்ற நிபந்தனையில் கற்றுக்கொண்டார். உபதேசம் பெற்றவுடன் திருக்கோஷ்டியூர் கோயில் கோபுரத்தின் மீது ஏறி அந்த திருமந்திர பொருளை அனைவரும் கேட்கும் வண்ணம் உறக்க கூறி ஊருக்கே உபதேசம் செய்து விட்டார்.

கோபமடைந்த திருக்கோட்டியூர் நம்பி குரு வாக்கை மீறியதால் நரகம் புக நேரிடும் என்று கூறினார். அனைவரும் முக்தி அடைவார்கள் என்றால் நான் ஒருவன் மட்டும் நரகம் செல்வதை பற்றி கவலை இல்லை மேலும் அது தன் பாக்கியம் என்றார் ராமானுஜர். திருக்கோட்டியூர் நம்பி இதனைக் கேட்டு ஆனந்தம் அடைந்து ராமானுஜரை எம்பெருமானார் என்று கூறி ஆரத் தழுவிக் கொண்டார்.

ஸ்ரீரங்கத்தில் இராமானுஜர் தம்முடைய பணியில் ஈடுபட்டிருந்த சமயத்தில் நாட்டை ஆண்டு வந்த முதலாம் குலோத்துங்க சோழன் சைவத்தில் தீவிர பற்று கொண்டு சைவ வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு பேராதரவை அளித்து வந்தான்.

ராமானுஜரால் வைணவம் பெருகி வருவதைக் கண்ட சில சைவர்கள் கவலையுற்று அரசனிடம் தங்களை கவலையைத் தெரிவிக்க, அவன் காவலர்களை அனுப்பி" நீ ராமானுஜரிடம் சென்று அவரை அழைத்து வா. சைவக் கொள்கைகளை அவர் ஏற்க வேண்டும் என்று நான் விரும்புவதாக அவரிடம் கூறு" என்று கட்டளையிட்டான்.

அரசனின் தொல்லைகளிலிருந்து விடுபட, ராமானுஜர் தமது சீடர்களுடன் மைசூர் சென்றார். திருநாராயணபுரத்தில் கோயில் கட்டினார். டில்லி சென்று காணாமல் போன 'இராமப் பிரியா" விக்ரகத்தை மீட்டு வந்தார். மேல்கோட்டையில் தங்கியிருந்து பல பணிகளை மேற்க் கொண்டு சோழன் இறந்த பிறகு ஸ்ரீரங்கம் திரும்பினார்.

"பிரஹ்மத்தை நேராக உயர்த்துணரும் அனுபவமே உபாசனை. பற்றை ஒழிப்பதும் பாவங்களின்றும் நீங்கப் பெறுவதும் ஞானத்தினால் நிகழ்வதாகும். உலகில் எல்லா பொருள்களும் என்னை பொருத்தவரையில் சமம். உயர்வு தாழ்வு கிடையாது. ஜாதியில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் அறிவோர் எளியோர் என்று நான் வேறுபாடு பாராட்டுவதில்லை" என்பவை ராமானுஜரின் அமுத மொழிகள்.

தீர்க்காயுசு என்ற முழுமையான வாழ்வு சுற்றான 120 ஆண்டுகள் வாழ்ந்தவர் ஸ்ரீரமானுஜர். இவர் இந்தியா முழுவதும் நீண்ட புனித பயணம் செய்தவர். திருப்பதி மலைகளில் ராமானுஜர் தவழ்ந்து கொண்டே சென்றார். தம் பாதங்களை வைத்துக் களங்கப்படுத்தக் கூடாதென்பதற்காகவே அவர் இவ்வாறு சென்றார்.

தமது இறுதி காலத்தில் அவர் 'எண்பத்திரண்டு வார்த்தைகளை' அருளிச் செய்ததாக வைஷ்ணவ சம்பிரதாய வழக்கு.
1137 ஆம் ஆண்டு ஸ்ரீரங்கத்தில் இறைவனடி எழுந்தருளிய ராமானுஜர் கோயிலுக்குள் அடக்கம் செய்யப்பட்டார். ராமானுஜர் விக்ரகம் திருப்பதி, காஞ்சி, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

தீண்டாமைக்கு எதிரான போராட்டம் இன்று நேற்று தொடங்கியது அல்ல பல நூற்றாண்டு போராட்டம் அது. அந்தப் போராட்டத்தில் ஒரு முக்கிய கண்ணியாக ஸ்ரீராமானுஜர் செயல்பட்டார் என்பதே அவரது பெருமை.

க.ரவீந்திரன்,
22 பிள்ளையார் கோயில் வீதி, சாஸ்திரி நகர்,
ஈரோடு - 638002.

தினம் ஒரு தலைவர்கள்

ஐ.மாயாண்டி பாரதி வரலாறு

சுதந்திர போராட்ட வீரர் தியாகி மாயாண்டி பாரதி
ஐ. மாயாண்டி பாரதி (1917 24 பிப்ரவரி 2015) இந்திய விடுதலைப் போராட்ட வீரர், இதழாளர் எழுத்தாளர், நகைச்சுவைப் பேச்சாளர், இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள் சமிதியின் தலைவர் பொதுவுடைமைப் போராளி என்று பல பரிமாணம் கொண்டவர்.
தமிழ் நாட்டில் அமைந்துள்ள மதுரை நகரின் மேலமாசி வீதியில் 70ஆம் எண் வீட்டில் வாழ்ந்த விஸ்வகர்மா சமூகத்தை சார்ந்த இருளப்பன் ஆசாரி தில்லையம்மாள் தம்பதியருக்கு 11ஆவது குழந்தையாக 1917 ஆம் ஆண்டில் பிறந்தார்.
மாணவத் தொண்டர்
1930 ஆம் ஆண்டில் மரைக்காடு என்னும் வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்தில் மாயாண்டி பாரதிக்கு அண்ணனான கருப்பையா கலந்துகொண்டார். இதனால் மாயாண்டி பாரதிக்கு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு ஏற்பட்டது. இதனால் 1932 ஆம் ஆண்டு நடைபெற்ற கள்ளுக்கடை மறியல் போராட்டத்தை மாயாண்டி தன் மாணவ நண்பர்களுடன் சென்று வேடிக்கை பார்த்தார். அதன் பின்னர் தன் நண்பர்களோடு சேர்ந்து லஜபதிராய் வாலிபர் சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினார். அந்த அமைப்பின் வழியாகக் காங்கிரசு நடத்தும் போராட்டங்களுக்கு உதவத் தொடங்கினார். அப்பொழுது பாரதியார் மீது தீவிர ஈடுபாடு கொண்டிருந்த மாயாண்டி தனது பெயரை மாயாண்டி பாரதி என மாற்றிக்கொண்டார்
1934 ஆம் ஆண்டில் காந்தியடிகள் மதுரைக்கு அரிசன நிதி திரட்டுவதற்காக வந்தபொழுது அவரைச் சந்தித்தார்.
1935 சூலை 9 ஆம் நாள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்துச் செல்லும் போராட்த்தில் பங்கு பெற்றது குறித்து பிரம்மஸ்ரீமாயாண்டி பாரதி ஒரு பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
"1939, ஜூலை 8ம் தேதி மீனாட்சியம்மன் கோவிலுக்குள் பல ஹரிஜனங்கள், நாடார் சமூகத்தவருடன் "வந்தே மாதரம்"ன்னு கத்திக் கொண்டே உள்ளே நுழைந்தோம். வைத்தியநாதய்யர் கம்பீரமாக முன்னாடிப் போறார். அப்போ இந்த சமூகத்தவங்க நுழையக் கூடாதுன்னு வச்சிருந்தாங்க. அதை ஒரே நாளில் தகர்த்து மீனாட்சியம்மன் கோவிலில் நுழைந்து கும்பிட்டாங்க.. பொற்றாமரைக் குளத்தில் குளிச்சாங்க.. அதுக்கு நாங்க பட்டப்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. எண்பது பேருடன் போயிட்டு திரும்பினோம். அப்போ கோவிலில் டிரஸ்டியா இருந்த ஆர்.எஸ். நாயுடு ஒத்துழைச்சாலும், திரும்பினதும் இன்னும் எதிர்ப்பு. வைத்தியநாத ஐயர் மீது கேஸ் போட்டாங்க.. ராஜாஜி முதல்வராக வந்ததும் யாரும் கோவிலுக்குள் நுழையலாம்னு சட்டம் போட்டதாலே அந்தக் கேஸ் அடிபட்டுப் போச்சு".
காங்கிரசு ஊழியர்
1938 ஆம் ஆண்டு முதல் மாயாண்டி பாரதி நேரடி அரசியல் நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கினார். அவ்வாண்டு இராசபாளையத்தில் தமிழ் மாகாண காங்கிரசு மாநாடு நடபெற்றது. அம்மாநாட்டிற்கு 'திருப்பூர் குமரனுக்கு நினைவுச் சின்னம் எழுப்புக' என்னும் கோரிக்கையைத் தன் நண்பர்களோடு இணைந்து பிரச்சாரம் செய்தவாரே சென்றார். அங்கே ம. கி. திருவேங்கடம், கே. இராமநாதன், சக்திதாசன் சுப்பிரமணியன் ஆகியோரின் நட்புக் கிடைத்தது. அவர்களின் அழைப்பின்பேரில் இதழியப் பணியாற்ற 1939 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மாயாண்டி பாரதி சென்னைக்குச் சென்றார். காங்கிரசு இயக்கத்தில் இணைந்தார்.
இந்து மகா சபை தலைவர் சாவர்க்கரை மதுரைக்கு அழைத்து வந்த மாயாண்டி பாரதி: பின்னர் 1940 ஆம் ஆண்டில் மதுரைக்குத் திரும்பினார். 1939 ஆம் ஆண்டில் இந்திய முசுலீம்கள் பாகிஸ்தான் கோரினர். இதனால் இந்திய தேசிய காங்கிரசில் இருந்த முசுலீம்கள் முக்கியத்துவம் இழந்தனர். பாகிஸ்தான் கோரிக்கை எதிர்த்து இந்து மகா சபை உருவாக்கப்பட்டது. 1940 ஆம் ஆண்டில் மாயாண்டி பாரதி மதுரை இராமநாதபுரம் மாவட்ட இந்து மகாசபை அமைப்புச் செயலாளராக இருந்தார் அப்பொழுது இந்து மகா சபை தலைவர் சாவர்க்கரை மதுரைக்கு அழைத்து வந்தார்

அப்பொழுது இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்தது. இளைஞர்கள் படையில் சேர்க்கப்பட்டார்கள். அதனை எதிர்த்துச் சாத்தூர் பகுதியில் போர் எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தினார். இதனால் 1940ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டு திருவில்லிபுத்தூர் சிறையில் அடைக்கப்பட்டார். ஆறு மாதச் சிறையும் 50 ரூபாய் தண்டமும் சிவகாசி நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது. பின்னர் அவர் மதுரை, திருச்சி, வேலூர், கோயமுத்தூர் சிறைகளுக்கு மாற்றப்பட்டு 1941 மார்ச் 21 ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டார். மீண்டும் சிறைவாசலில் கைதுசெய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் பாதுகாப்புக் கைதியாகச் சிறையில் இருந்தார். 1942ஆம் ஆண்டில் விடுதலை பெற்ற அவர், வெள்ளையனே வெளியேறு போராட்டத்தின்பொழுது பாதுகாப்புக் கைதியாக மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார். 1943ஆம் ஆண்டில் வெளியே வந்த அவர் மீண்டும் கைது செய்யப்பட்டபொழுது, அவ்வண்டிக்கு பின்னால் ஓடிவந்த அவர் தாயார் மரணமடைந்தார். சிறையில் இருந்த மாயாண்டி பாரதியால் தன் தாயின் இறுதிச்சடங்கில் கூடக் கலந்துகொள்ள முடியவில்லை. மாயாண்டி பாரதி சிறையில் இருந்தபொழுது, இந்து மகாசபையினருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இந்து மகா சபையிலிருந்து விலகினார்.
1939 ஆம் ஆண்டில் சென்னைக்குச் சென்ற மாயாண்டி பாரதி முதலில் திரு. வி. க. ஆசிரியராக இருந்த நவசக்தி இதழில் துணையாசிரியராகப் பணியாற்றினார். அங்கு பரலி சு. நெல்லையப்பரைச் சந்தித்தார். அதே ஆண்டில் லோகசக்தி என்னும் இதழில் மாயாண்டி பாரதி தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார். அவ்விதழில் 1939 அக்டோபர் 1 ஆம் நாள் போருக்குத் தயார் என்னும் கட்டுரையை எழுதினார். இக்கட்டுரையை வெளியிட்டதற்காக அவ்விதழுக்கு 750 ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. அதனைக் கட்ட முடியாததால் அவ்விதழ் நின்றுபோனது.
எனவே மாயாண்டி பாரதி உள்ளிட்ட இளைஞர்கள் இணைந்து பாரதசக்தி என்னும் இன்னொரு இதழைத் தொடங்கினர்.
இவ்விதழில் 1939 ஆம் ஆண்டில் வீரபாண்டிய கட்டபொம்மன், சுபாஷ் சந்திரபோசு, எம். என். ராய். மாசேதுங் ஆகியோரைப் பற்றிய கட்டுரைகளை எழுதினார்.
1939ஆம் ஆண்டில் படுகளத்தில் பாரததேவி, கம்பெனியைக் கலக்கிய கட்டபொம்மன் ஆகிய கட்டுரைகளை எழுதியதற்காகக் கைது செய்யப்பட்டார்.
1941 ஆம் ஆண்டில் கோயமுத்தூர் சிறையில் இருந்தபொழுது பொதுவுடைமைத் தலைவர்களான ஜமத்கனி, வி. பி. சிந்தன், கே. ஏ. தாமோதரன் ஆகியோரை மாயாண்டி பாரதி சந்தித்தார். அவர்கள் நடத்திய மார்க்சிய வகுப்பால் ஈர்க்கப்பட்டு, பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்தார்
1941ஆம் ஆண்டில் மதுரை ஹார்விமில் தொழிலாளர் போராட்டத்தில் அவர் கலந்துகொண்டார். அதனால் மீண்டும் கைது செய்யப்பட்டு மதுரை, திருச்சி, வேலூர் சிறைகளில் அடைக்கப்பட்டார்.
நெல்லைச் சதி வழக்கு
1950 ஆம் ஆண்டில் பொதுவுடைமைக் கட்சியினர் மீது அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. பலரும் கொல்லப்பட்டனர். அக்கொலைகளுக்கு பழிவாங்கும் நோக்கில், தூத்துக்குடிக்கு அருகில் உள்ள மீளவிட்டான் தொடர்வண்டி நிலையத்தில் தண்டவாளத்தைப் பிரித்துச் சரக்குத் தொடர்வண்டியின் 25 பெட்டிகளையும் 2 இந்திரங்களையும் மாயாண்டி பாரதியை உள்ளிட்ட பொதுவுடைமைக் கட்சியினர் கவிழ்த்தனர். அவ்வழக்கில் மாயாண்டி பாரதிக்கும் மேலும் பதின்மருக்கும் இரண்டை வாழ்நாள் தண்டனை வழங்கப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட 100 பேரில், மீதமிருந்தவர்களுக்கு குறைந்த கால அளவுத் தண்டனைகள் வழங்கப்பட்டன. மதுரைச் சிறையில் 4ஆண்டுகள் தண்டனை அனுபவித்த மாயாண்டிபாரதி உள்ளிட்டவர்கள், தமிழகத்தில் நடந்த பெரும் போராட்டங்களுக்குப் பின்னர், 1954 ஆம் ஆண்டில் விடுதலை செய்யப்பட்டனர் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்த ஜீவா, பாலதண்டாயுதம் உட்பட பல தலைவர்களுடன் ஐம்பது வருஷங்களுக்கு மேலாக நெருக்கமாகப் பழகியிருந்த மாயாண்டி பாரதி தனது இறுதி நாட்களில் கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி வேதனையுடன் சொல்கிறார்.
"கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாகப் பிரிந்ததில் எனக்கு உடன்பாடில்லை... தேசியத்தையும், காந்தியைப் பற்றியும் அதற்காகப் பாடுபட்ட தியாகிகளைப் பற்றி பேசினாதாலோ என்னவோ, என்னைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒதுக்கி விட்டார்கள்... இப்போது பத்து வருஷங்களாக தியாகிகளுக்காக பாடுபடுவதுதான் வாழ்க்கையா இருக்கு.
ஜீவா எவ்வளவு அருமையான, எளிமையான மனிதர்? அவர் மாதிரி மனுஷங்க இப்போ கம்யூனிஸ்ட் கட்சியில் ஏன் இல்லை? அல்லது அப்படி இருக்கிறவங்களுக்கு ஏன் மரியாதை இல்லை?
நாங்க எல்லாம் பதவி, பட்டம்னு எதையும் எதிர்பார்த்து இருக்கலையே?" கரகரப்பான குரலில் சொல்லும் மாயாண்டி பாரதியின் மேலமாசி வீதி வீட்டில் தங்கியிருந்து இசைக்குழு நடத்திக் கொண்டிருந்த பிள்ளைகள் பாவலர் வரதராஜனும், இளையராஜாவும்.
குடும்பம்
மாயாண்டி பாரதி, தனது 36 வயதில் எட்டயபுரத்தில் பிறந்த பொன்னம்மாள் என்பவரை 1954ஆம் ஆண்டில் மணந்தார். இத்தம்பதியருக்கு குழந்தைகள் இல்லை.
மாயாண்டி பாரதி மதுரை காக்காதோப்பு சந்தில் உள்ள பாரதமாதா இல்லத்தில் தன் மனைவி பொன்னம்மாளுடன் வசித்து வந்தார். உடல் நலக் குறைவு காரணத்தால் மாயாண்டி பாரதி தனது 98 வது வயதில் 2015 பிப்ரவரி 24 அன்று காலமானார்.

இந்தியா, ஸ்பெயின் வளங்களை ஒருங்கிணைக்க வேண்டும்: குடியரசுத் தலைவா முர்மு

புதுடெல்லி, ஜன.23:

பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்றிணைந்து போரிட இந்தியாவும் ஸ்பெயினும் தமது வளங்கள், திறன்களை ஒருங்கிணைக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவா திரௌபதி முர்மு தெரிவித்தா.

இந்தியா வந்த ஸ்பெயின் வெளியுறவு அமைச்சர் ஜோஸ் மேனுவல் ஆல்பரேஸ், புது தில்லியில் குடியரசுத் தலைவா திரௌபதி முர்முவை அவரது மாளிகையில் புதன்கிழமை சந்தித்தா. அப்போது அவரிடம் முர்மு கூறியதாவது:

இந்தியா, ஸ்பெயின் இடையே நூற்றாண்டுகளாக நல்லுறவு நிலவுகிறது. வா்த்தகம், பண்பாடு, மக்களாட்சி விழுமியங்களால் அந்த உறவு செழிப்பாகியுள்ளது.

உலகில் ஸ்திரத்தன்மை, அமைதி, வளமை நிலவ வேண்டும் என்ற இரு நாடுகளின் பொதுவான இலக்குகளை எட்ட ஐ.நா., ஜி20 கூட்டமைப்பு போன்ற பன்முகத் தளங்களில் இரு நாடுகளும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

உலக அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு பயங்கரவாதம் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. அதற்கு எதிராக ஒன்றிணைந்து போரிட இந்தியாவும் ஸ்பெயினும் தமது வளங்கள், திறன்களை ஒருங்கிணைக்க வேண்டும்.

இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வா்த்தக ஒப்பந்தம் கையொப்பமான பின்னா, இந்தியா-ஸ்பெயின் இடையிலான வா்த்தக உறவு மேலும் வலுப்பெறும் என்று தெரிவித்தா.

டெல்லி குண்டுவெடிப்புடன் தொடர்பு எனக்கூறி முதியவர் டிஜிட்டல் கைது: ரூ. 16 லட்சம் மோசடி

மும்பை, ஜன.23:

மராட்டிய மாநிலம் மும்பை புறநகர் மாவட்டம் கிழக்கு அந்தேரி பகுதியை சேர்ந்தவர் சேகர் (பெயர் மாற்றப்பட்டுள்ளது - வயது 75). இவர் மும்பை மாநகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் ஆவார்.

இதனிடையே, கடந்த மாதம் 11ம் தேதி சேகர் செல்போன் எண்ணுக்கு அழைப்பு வந்துள்ளது. அந்த அழைப்பில் என்.ஐ.ஏ. அதிகாரி என அறிமுகப்படுத்திக்கொண்ட மோசடி கும்பல் சேகரிடம் டெல்லி குண்டுவெடிப்பு கும்பலுடன் உங்களுக்கு தொடர்பு உள்ளதாக கூறியுள்ளனர். மேலும், சேகரிடம் உங்கள் வங்கி கணக்கில் பயங்கரவாத அமைப்பின் வங்கி கணக்கிற்கு ரூ. 7 கோடி பணம் பரிமாறியுள்ளதாக குற்றஞ்சாட்டினர்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைக்கு சேகரின் வங்கி கணக்கு விவரங்களை கேட்டுள்ளனர். மேலும், இந்த வழக்கில் உங்களை டிஜிட்டல் கைது செய்துள்ளதாக சேகரிடம் அந்த கும்பல் கூறியுள்ளது. மோசடி கும்பலின் மிரட்டலை நம்பிய சேகர் தனது வங்கி கணக்கில் இருந்து அந்த கும்பல் கூறிய வங்கி கணக்கிற்கு ரூ. 16 லட்சம் பணத்தை டெபாசிட் செய்துள்ளார். பணத்தை டெபாசிட் செய்தப்பின் அந்த கும்பல் சேகருடனான தொடர்பை துண்டித்துள்ளது.

இதையடுத்து, தான் ஏமாற்றப்பட்டதை உணர்த்த சேகர் உடனடியாக போலீசில் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், டிஜிட்டல் கைது மூலம் ரூ. 16 லட்சம் மோசடி செய்த கும்பல் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அடல் ஓய்வூதியத் திட்டம்: 2030-31 வரை நீட்டிப்பு - மத்திய அமைச்சரவை ஒப்புதல்

புதுடெல்லி, ஜன.23:

டில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அமைப்புசாராத் துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் உள்பட 18 முதல் 40 வயதுக்குட்பட்ட அனைத்து இந்தியக் குடிமக்களும் 60 வயதுக்குப் பிறகு மாதம் ரூ.1,000 முதல் ரூ.5,000 வரை உத்தரவாத ஓய்வூதியம் பெறுவதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டத்தை கடந்த 2015-ஆம் ஆண்டு மே 9-ஆம் தேதி மத்திய அரசு அறிமுகம் செய்தது. வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படுவர். சந்தாதாரரின் இறப்புக்குப்பிறகு அவரது துணைவருக்கும், அதன் பிறகு அவரால் நியமிக்கப்பட்ட பயனாளிக்கும் (நாமினி) பலன்கள் தொடரும். 2026-ஆம் ஆண்டு ஜனவரி 19-ஆம் தேதி கணக்கின்படி இந்தத் திட்டத்தில் 8.66 கோடி சந்தாதாரர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தை வரும் 2030-31 நிதியாண்டு வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஸ்ஐடிபிஐ-க்கு ரூ. 5,000 கோடி பங்கு மூலதனம்

புதுடெல்லி, ஜன.23:

குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு (எம்எஸ்எம்இ) கடன் வழங்குவதை அதிகரிக்கும் நோக்கில் இந்திய சிறு நிறுவனங்கள் மேம்பாட்டு வங்கிக்கு (எஸ்ஐடிபிஐ) ரூ. 5,000 கோடி பங்கு மூலதன ஆதரவை அளிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

மத்திய நிதிச் சேவைகள் துறை (டிஎஃப்எஸ்) மூன்று தவணைகளாக இந்தப் பங்கு மூலதன ஆதரவை எஸ்ஐடிபிஐ-க்கு வழங்க உள்ளது. இந்தக் கூடுதல் பங்கு மூலதனம் மூலம், குறு, சிறு, நடுத்தர நிறுனங்களுக்கு நியாயமான வட்டி விகிதத்தில் எஸ்ஐடிபிஐ கடன் வழங்குவது அதிகரிக்கும். குறிப்பாக, இந்த வங்கி மூலம் 2025 நிதியாண்டில் 76.26 லட்சம் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு கடனுதவி வழங்கப்பட்ட நிலையில், 2028-ஆம் நிதியாண்டில் அது 1.02 கோடியாக அதிகரிக்கும் (25.74 லட்சம் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் கூடுதல் பயனாளிகளாக சேர்க்கப்படுவர்). இந்தத் துறையில் 1.12 கோடி புதிய வேலைவாய்ப்புகளும் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்ற சம்பவங்களில் பாதிக்கப்பட்டவரின் வீட்டுக்கே சென்று புகாரைப் பெறும் வசதி - தெலங்கானா காவல் துறை புதிய முயற்சி

ஐதராபாத், ஜன.23:

போக்ஸோ வழக்குகள் உள்ளிட்ட குற்ற சம்பவங்கள் தொடா்பாக பாதிக்கப்பட்ட நபா்கள் அல்லது அவா்களின் உறவினா்கள் காவல் நிலையத்துக்குச் செல்லாமல் வீட்டில் இருந்தபடியே புகாா் அளிக்கும் வகையிலான புதிய நடைமுறையை நாட்டிலேயே முதல்முறையாக தெலங்கானா மாநில காவல் துறை அறிமுகம் செய்ய உள்ளது. தெலங்கானா மாநில காவல் துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவு (சிஐடி), இந்தப் புதிய திட்டத்தை அடுத்த வாரம் அறிமுகப்படுத்த உள்ளது.

இதுகுறித்து மாநில சிஐடி கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநா (ஏடிஜிபி) சாரு சின்ஹா ஹைதராபாதில் புதன்கிழமை கூறியதாவது:

பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான (போக்ஸோ) பாலியல் துன்பறுத்தல்கள், எஸ்சி., எஸ்டி பிரிவினருக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றங்கள், குழந்தைத் திருமணங்கள், ராகிங் உள்ளிட்ட குற்றங்களால் பாதிக்கப்படுபவா்களில் பெரும்பாலானோா், காவல்நிலையத்துக்கு நேரில் வந்து புகாா் தெரிவிக்க தயங்குகின்றனா.

இதை உணா்ந்து, இதுபோன்ற குறிப்பிட்ட சில குற்ற சம்பவங்களில், காவல் நிலையத்தை மையப்படுத்திய வழக்குப் பதிவு (எஃப்ஐஆா்) என்ற நிலையிலிருந்து, குடிமக்களை மையப்படுத்திய வழக்குப் பதிவு நடைமுறையாக மாற்ற தெலங்கானா காவல் துறை முடிவெடுத்தது. இந்தப் புதிய நடைமுறையின்படி, போக்ஸோ உள்பட மேற்குறிப்பிட்ட குற்ற சம்பவங்களில் பாதிக்கப்படும் நபா்கள், புகாரைப் பதிவு செய்ய காவல் நிலையத்துக்குச் செல்ல வேண்டியதில்லை. அவா்களின் வீட்டில் இருந்தபடியே இதுதொடா்பான புகாரைப் பதிவு செய்யலாம்.

அதனடிப்படையில், போலீஸாா உடனடியாக பாதிக்கப்பட்ட நபரின் வீட்டுக்கோ, மருத்துவமனைக்கோ அல்லது அவரின் விருப்பத்தோ்வு அடிப்படையிலான இடத்துக்கோ சென்று பாதிக்கப்பட்டவரின் முதல்கட்ட வாக்குமூலத்தைப் பதிவு செய்வா. பின்னா, அந்த விவரங்கள் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்துக்கு அனுப்பப்பட்டு, எஃப்ஐஆா் பதிவு செய்யப்படுவதோடு, எஃப்ஐஆா் நகலும் பாதிக்கப்பட்ட நபரின் வீட்டுக்கே விநியோகிக்கப்பட்டுவிடும்.

இந்த நடைமுறை மூலம், குற்ற சம்பவங்கள் தொடா்பாக உரிய நேரத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை தொடங்கப்படும் என்பதோடு, பாதிக்கப்பட்ட நபா்கள் அலைக்கழிக்கப்படுவது முழுமையாகத் தவிா்க்கப்படும்.

இந்தப் புதிய நடைமுறை குறித்து போலீஸாருக்கு தற்போது பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஒரு வாரத்தில் இந்தப் பயிற்சி நிறைவுபெற்றுவிடும். எனவே, மாநிலத்தில் இந்தப் புதிய நடைமுறை வரும் 27-ஆம் தேதி முதல் அறிமுகப்படுத்தப்படும் என்றா.

படுக்கை அறையில் வெடித்த மோதல்...தூங்கிய கணவரை கழுத்தை இறுக்கி கொன்ற மனைவி

திருப்பதி, ஜன.23:

ஆந்திர மாநிலம், ஏலூரு மாவட்டம், நுஜி வீடு அடுத்த கிழக்கு திகவல்லியை சேர்ந்தவர் சுதீர் ரெட்டி (வயது 44). இவரது மனைவி ஞான பிரசன்னா (வயது 40) சுதீர் ரெட்டி ஐதராபாத், குகட் பள்ளி, விவேகானந்தா நகரில் குடும்பத்தினருடன் தங்கி இருந்து தனியா நிறுவனத்தில் மார்க்கெட்டிங் மேனேஜராக வேலை செய்து வந்தார். கணவன், மனைவி இருவரும் ஒருவரையொருவர் நடத்தையில் சந்தேகம் அடைந்தனர். இதனால் அடிக்கடி தகராறு ஏற்பட்டது. சுதீர் ரெட்டி தினமும் மது குடித்து விட்டு வந்து மனைவியை அடித்து, உதைத்து துன்புறுத்தி வந்தார். அப்போது இருவருக்கும் மோதல் வெடித்தது. அதன் பின்னர் சுதீர் ரெட்டி படுக்கையறையில் தூங்கிக் கொண்டு இருந்தார். அப்போது ஞான பிரசன்னா வீட்டிலிருந்த கயிறை எடுத்து வந்து கணவரின் கழுத்தை இறுக்கி கொலை செய்தார். பின்னர் கணவரை படுக்கையில் இருந்து கீழே தள்ளினார். இதில் சுதீர் ரெட்டி உடலில் காயம் ஏற்பட்டது. காலை உறவினர்களுக்கு போன் செய்த ஞான பிரசன்னா கணவர் மது போதையில் படுக்கையில் இருந்து கீழே விழுந்து இறந்து விட்டதாக நம்ப வைத்தார்.

சகோதரனின் சாவில் மர்மம் இருப்பதாக சுதீர் ரெட்டியின் சகோதரி போலீசில் புகார் செய்தார். போலீசார் சந்தேக மரணம் என வழக்கு பதிவு செய்தனர். பிரேத பரிசோதனை அறிக்கையில் சுதீர் ரெட்டி கழுத்தை இறுக்கி கொலை செய்யப்பட்டது தெரிய வந்தது. போலீசார் ஞான பிரசன்னாவை கைது செய்து ஜெயிலில் அடைத்தனர்.

கர்நாடகத்தில் 106 கிலோ கஞ்சா பறிமுதல்: இருவர் கைது

பெங்களூரு, ஜன.23:

தென்கன்னட மாவட்டம், புத்தூர் காவல்நிலையத்துக்கு உளவுப்பிரிவு மூலம் கிடைத்த தகவலின் அடிப்படையில் மங்களூருக்கு செல்லும் சாலையில் போலீஸார் செவ்வாய்க்கிழமை வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, ஒரு கார் மற்றும் சரக்கு வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது, ஓட்டுநர்களின் நடத்தை வித்தியாசமாக இருந்ததால் வாகனத்தை முழுமையாக சோதித்துள்ளனர். இந்த சோதனையில் வாகனத்தில் 73 நெகிழி பொட்டலங்களில் பதுக்கிவைத்திருந்த 106.06 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு ரூ. 53 லட்சம் என போலீஸார் தெரிவித்தனர். மேலும், இந்த கஞ்சாவை கேரளம், மங்களூரில் விற்பனைக்காக எடுத்துச் செல்வது விசாரணையில் தெரியவந்தது. இதுதொடர்பாக பெல்தங்கடி வட்டம், சார்மடி கிராமத்தை சேர்ந்த பி. ரஃபீக் (37), அப்துல் சாதிக் (37) ஆகிய இருவரை போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

தூய்மையான வாக்காளர் பட்டியலே ஜனநாயகத்துக்கு பலம் -தலைமைத் தேர்தல் ஆணையர்

புதுடெல்லி, ஜன.23:

'ஜனநாயகத்தை வலுப்படுத்த தூய்மையான வாக்காளா பட்டியல் மிக முக்கியம்' என்று தலைமைத் தோ்தல் ஆணையா ஞானேஷ் குமாா் தெரிவித்தாா்.

பிகாரைத் தொடாந்து, தமிழகம், மேற்கு வங்கம் உள்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தோ்தல் ஆணையம் மேற்கொண்டுவரும் வாக்காளா பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆா்) பணியை மேற்கு வங்கத்தில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிா்க்கட்சிகள் கடுமையாக எதிா்த்துவரும் சூழலில் இந்தக் கருத்தை அவா தெரிவித்தாா்.

டில்லியில் புதன்கிழமை நடைபெற்றதோ்தல் மேலாண்மை அமைப்புகளின் சா்வதேச மாநாட்டின் தொடக்க விழாவில்

பங்கேற்ற அவா் மேலும் பேசியதாவது:

பிகாா் மாநிலத்தில் கடந்த ஆண்டு எஸ்ஐஆா் பணி மேற்கொண்டபோது, வாக்காளா பட்டியலில் இருந்து பெயா்களை நீக்கியது அல்லது புதிதாகச் சோ்த்ததை எதிா்த்து ஒரு புகாா்கூட சமாப்பிக்கப்படவில்லை. எஸ்ஐஆா் பணி நிறைவடைந்ததும் பிகாரில் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்ட சட்டப்பேரவைத் தோ்தலில் ஒரு லட்சம் வாக்குச்சாவடிகள் இடம்பெற்ற நிலையில், ஒன்றில்கூட மறு தோ்தலுக்கான உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

அந்த வகையில், ஜனநாயகத்தை வலுப்படுத்த, சட்டப்படி தகுதியுள்ள ஒவ்வொரு வாக்காளரும் சோ்க்கப்பட்ட தூய்மையான வாக்காளா பட்டியலும், அத்தகைய வாக்காளா பட்டியலின் அடிப்படையில் தோ்தல் நடத்தப்படுவதும் மிக அவசியம் என்றா.

ஆண்டுக்கு இரு முறை வழக்குரைஞர் கவுன்சில் தேர்வு - இறுதி பருவ சட்ட மாணவர்களும் எழுதலாம்

புதுடெல்லி, ஜன.23:

'அகில இந்திய வழக்குரைஞா் கவுன்சில் (ஏஐபிஇ) தோ்வு நடத்தப்படுகிறது. இத் தோ்வில் இறுதிப் பருவ சட்ட (எல்எல்பி) மாணவா்களும் பங்கேற்கலாம்' என்று உச்சநீதிமன்றத்தில் இந்திய வழக்குரைஞா சங்கம் (பிசிஐ) தரப்பில் செவ்வாய்க்கிழமை தெரிவிக்கப்பட்டது.

சட்டப்படிப்பை (எல்எல்பி) முடிக்கும் மாணவா்கள் வழக்குரைஞராக பணியாற்ற வழக்குரைஞா் கவுன்சிலில் (பாா் கவுன்சில்) பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்ய, பிசிஐ சாா்பில் நடத்தப்படும் ஏஐபிஇ தோ்வில் தகுதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த ஏஐபிஇ தோ்வில் பங்கேற்க எல்எல்பி இறுதிப் பருவ மாணவா்களையும் அனுமதிக்க உத்தரவிடக் கோரி கடந்த 2024-ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை 2024-ஆம் ஆண்டு செப்டம்பா 20-ஆம் தேதி விசாரித்த உச்சநீதிமன்றம், ஏஇபிஇ தோ்வில் எல்எல்பி இறுதிப் பருவ மாணவா்களையும் அனுமதிக்க இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. எல்எல்பி முடிக்கும் மாணவா்கள் ஏஇபிஇ தோ்வுக்காக ஓராண்டு காத்திருப்பதை அனுமதிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் அப்போது குறிப்பிட்டது. இந்த வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோா அடங்கிய அமாவில் செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது பிசிஐ தரப்பில் ஆஜரான வழக்குரைஞா, 'ஏஐபிஇ தோ்வு ஆண்டுக்கு இரு முறை நடத்தப்படுகிறது. இத் தோ்வில், எல்எல்பி இறுதிப் பருவ மாணவா்களும் பங்கேற்கலாம். அதற்கேற்ப 'பிசிஐ விதிகள் 2026-ஐ பிசிஐ வகுத்துள்ளது' என்றா.

ஆந்திர மதுபான ஊழல் வழக்கு: ஜெகனின் தனிச் செயலா 3 பேரின் இடைக்கால ஜாமீன் நீட்டிப்பு

புதுடெல்லி, ஜன.23:

ஆந்திர முதல்வராக ஜெகன் மோகன் ரெட்டி பதவி வகித்தபோது, 2019-2024 வரையிலான காலத்தில் மதுபானக் கொள்முதலில் ரூ.3,500 கோடி ஊழல் நடைபெற்றாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடா்பாக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரியும், முதல்வா் அலுவலக முன்னாள் செயலருமான தனஞ்செய ரெட்டி, ஜெகன் மோகன் ரெட்டியின் தனிச் செயலராக இருந்த கிருஷ்ண மோகன் ரெட்டி, பாரதி சிமெண்ட்ஸ் நிறுவன இயக்குநா் பாலாஜி கோவிந்தப்பா ஆகியோா் மீது வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் 3 பேரும் பெற்றிருந்த ஜாமீனை கடந்த நவம்பா் 19-ஆம் தேதி ஆந்திர உயா்நீதிமன்றம் ரத்து செய்ததோடு, விசாரணை நீதிமன்றத்தில் சரணடையும்படியும், அங்கு ஜாமீனுக்கு விண்ணப்பிக்கும்படியும் உத்தரவிட்டிருந்தது. இதை எதிா்த்து 3 பேரும் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனா். இதை முன்பு விசாரித்த உச்சநீதிமன்றம், மூவரின் மனு குறித்து ஆந்திர அரசு மற்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்த நபா்களின் பதிலை கோரி, இடைக்கால ஜாமீன் அளித்திருந்தது.

இந்நிலையில், இந்த மனு உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூா்ய காந்த், நீதிபதிகள் ஜய்மால்ய பாக்சி, விபுல் எம் பஞ்சோலி ஆகியோரைக் கொண்ட அமா்வு முன் புதன்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், ஜாமீனை ரத்து செய்த உயா்நீதிமன்ற உத்தரவில் தலையிட மறுத்துவிட்டனா். அதேநேரத்தில் 3 பேரையும் விசாரணை நீதிமன்றத்தை அணுகி ஜாமீன் பெறும்படி உத்தரவிட்டு, இடைக்கால ஜாமீனை நீட்டித்து ஆணையிட்டனா்.

சட்டவிரோத சுரங்கத்தால் பெரும் பாதிப்பு: உச்சநீதிமன்றம்

புதுடெல்லி, ஜன.23:

இயற்கை எழில்மிகு நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட ஆரவல்லி மலைத் தொடா் குஜராத், ராஜஸ்தான், ஹரியாணா ஆகிய மாநிலங்களிலும், தில்லி யூனியன் பிரதேசத்திலும் பரவியுள்ளது.

இந்நிலையில், உள்ளூா் நிலப்பரப்பில் குறைந்தபட்சம் 100 மீட்டருக்கு மேற்பட்ட உயரத்தை உடைய மலை 'ஆரவல்லி மலை' என்றும், 500 மீட்டருக்கு இடைப்பட்ட இரண்டு அல்லது இரண்டுக்கும் அதிகமான, 100 மீட்டா உயர மலைகளை 'ஆரவல்லி மலைத் தொடா்' என்றும் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அளித்த நிபுணா குழு புதிய விளக்கத்தை உச்சநீதிமன்றத்தில் சமாப்பித்தது. இந்தவிளக்கத்தை ஏற்றுக்கொண்டு கடந்த ஆண்டு நவம்பா் 20-ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இதனால் 100 மீட்டருக்கு கீழுள்ள மலைப் பகுதிகளில் சுரங்கப் பணிகள் நடைபெறும் எனவும், நிலத்தடி நீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு பாலைவன நிலமாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் சுற்றுச்சூழல் ஆா்வலா்கள் உள்பட பலரும் எச்சரித்தனா.

இதைத் தொடாந்து, ஆரவல்லி மலைத் தொடரின் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்காக, அங்கு சுரங்கப் பணிகளுக்கான புதிய குத்தகைகளை வழங்க மாநில அரசுகளுக்குத் தடை விதித்து மத்திய அரசு கடந்த ஆண்டு டிசம்பா 24- ஆம் தேதி உத்தரவிட்டது. இருப்பினும், இந்த விவகாரம் நாடு முழுவதும் பெரும் அதிா்வலைகளை ஏற்படுத்திய நிலையில், உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து டிசம்பா் 29-ஆம் தேதி மீண்டும் விசாரித்தது. அப்போது ஆரவல்லி மலை மற்றும் மலைத் தொடா் குறித்து சுற்றுச்சூழல் அமைச்சகம் அமைத்த குழு அளித்த பரிந்துரைகள், அதை ஏற்று உச்சநீதிமன்றம் நவம்பா 20-ஆம் தேதி வெளியிட்ட உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

இந்நிலையில், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூா்ய காந்த், நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி மற்றும் விபுல்.எம்.பஞ்சோலி ஆகியோா அடங்கிய அமாவு முன் புதன்கிழமை விசாரணை நடைபெற்றது. அப்போது ஆரவல்லி மலை மற்றும் மலைத் தொடா் குறித்து புதிய விளக்கத்துக்கு ஏற்கெனவே விதித்த இடைக்காலத் தடை உத்தரவை நீதிபதிகள் நீட்டித்தனா.

சபரிமலை தங்கக் கவச முறைகேடு: டிடிபி முன்னாள் தலைவருக்கு ஜாமீன் வழங்க உயா்நீதிமன்றம் மறுப்பு

சபரிமலை, ஜன.23:

கடந்த 2019-இல் சபரிமலை ஐயப்பன் கோயிலின் கருவறைக் கதவுகள் மற்றும் துவாரபாலகா சிலைகளின் தங்கக் கவசங்கள் புதுப்பிக்கப்பட்ட பிறகு, அவற்றின் எடை குறைந்ததாகப் புகாா் எழுந்தது. இது தொடா்பாக இரு வழக்குகள் பதிவுசெய்யப்பட்ட நிலையில் விசாரணை மேற்கொள்ள கேரள உயா்நீதிமன்ற வழிகாட்டுதலில் சிறப்பு புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) அமைக்கப்பட்டது.

இதையடுத்து, தங்கக் கவச புதுப்பிப்புப் பணிக்கான செலவை ஏற்ற பெங்களூரு தொழிலதிபா உண்ணிகிருஷ்ணன் போற்றி, திருவிதாங்கூா் தேவஸ்வம் வாரிய முன்னாள் தலைவா்கள் ஏ.பத்மகுமாா், என்.வாசு உள்பட 12 பேரை எஸ்ஐடி கைது செய்து விசாரித்து வருகிறது.

இதனிடையே ஏ.பத்மகுமாா், டிடிபியின் முன்னாள் நிா்வாக அதிகாரி பி.முராரி பாபு மற்றும் பெல்லாரியில் உள்ள நகைக் கடை அதிபா் கோவாதன் ஆகியோா ஜாமீன் கோரி கேரள உயா்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனா.

அவா்கள் மூன்று பேருக்கும் ஜாமீன் வழங்க மறுப்பு தெரிவித்து அந்த மனுக்களை நீதிபதி புதன்கிழமை தள்ளுபடி செய்தாா்.

கள்ளச்சாராய வழக்கில் பெண்ணை சிக்க வைத்த 2 போலீஸார் சஸ்பெண்ட்

சென்னை, ஜன.23: மயிலாப்பூர் போலீஸார் கடந்த மாதம் 24-ம் தேதி அதே பகுதி பிடாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த வனிதா (36) என்ற பெண் தண்ணீர் கேன் போடுவதுபோல் நடித்து, 20 லிட்டர் கேனில் சட்டவிரோதமாக சாராயம் விற்பனை செய்து வந்ததாக கூறி அவரைக் கைது செய்தனர்.

ஆந்திராவிலிருந்து சாராயத்தை வாங்கி வந்து, மயிலாப்பூரில் பதுக்கி வைத்து விற்பனை செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இந்த வழக்கில் திடீர் திருப்பமாக, மாமூல் கொடுக்க மறுத்ததால் மயிலாப்பூர் காவல் துணை ஆணையரின் தனிப்படையைச் சேர்ந்த 3 போலீஸார் வனிதாவை சிக்க வைத்திருப்பது தெரியவந்தது.

அதாவது குற்றச்சாட்டுக்கு உள்ளான வனிதா மீது ஏற்கெனவே மதுபாட்டில்கள் விற்பனை செய்தது தொடர்பாக 10 குற்ற வழக்குகள் உட்பட 12 வழக்குகள் உள்ளன.

தற்போது அவர் திருந்தி வாழ்வதுடன், வீடு வீடாக தண்ணீர்கேன் போட்டு வாழ்க்கையை நடத்தி வருகிறார். இந்நிலையில்தான் அவரிடம் தனிப்படையைச் சேர்ந்த போலீஸார் மாமூல் கேட்டதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக உயர் போலீஸ் அதிகாரிகள் விசாரித்தனர். இதில் போலீஸார் மீதான குற்றச்சாட்டு உண்மை என தெரியவந்ததை அடுத்து, தனிப்படையைச் சேர்ந்த தலைமைக் காவலர் வினோத் குமார் (ஜாம்பஜார் காவல் நிலையம்), முதல்நிலை காவலர் பிரகலநாதன் (ராயப்பேட்டை காவல் நிலையம்), முதல்நிலை காவலர் செல்வகுமார் (பட்டினப்பாக்கம்) ஆகிய 3 பேர் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு மாற்றப்பட்டனர்.

பின்னர் பிரகலநாதன், செல்வகுமார் ஆகியோர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். வினோத் குமார் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

மகளை கொலை செய்த தந்தை கைது: இன்ஸ்டாகிராம் பழக்கத்தால் விபரீதம்

திருப்பூர், ஜன.23: திருமணத்துக்கு பின்னர், இன்ஸ்டாகிராமில் பழகிய ஆண் நண்பருடன் வெளியூர் சென்ற மகளைக் கொன்ற தந்தை கைது செய்யப்பட்டார். நாகப்பட்டினத்தை சேர்ந்தவர் ஆறுமுகம் (48). இவர் குடும்பத்துடன் திருப்பூர் முருகம்பாளையத்தில் தங்கி, சாய ஆலையில் வேலை செய்து வருகிறார். இவரது மகள் சிம்யா (23). இவரது கணவர் பிரேம்குமார். இவர்களுக்கு 3 வயதில் பெண் குழந்தை உள்ளது.

இந்நிலையில், கடந்த 3-ம் தேதி குழந்தையுடன் சிம்யா தலைமறைவானார். இது தொடர்பாக ஆறுமுகம், திருப்பூர் வீரபாண்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

சிம்யாவின் இன்ஸ்டாகிராம் பக்கத்தை சோதித்தபோது, அதில் கன்னியாகுமரியை சேர்ந்த பிரவீன்குமார் என்பவருடன் பழகி வந்தது தெரியவந்தது. இதையடுத்து வீரபாண்டி போலீஸார் குமரி சென்று, சிம்யா மற்றும் குழந்தையை நேற்று மீட்டு வந்தனர்.

பின்னர், சிம்யாவுக்கும், அவரது தந்தை ஆறுமுகத்துக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த ஆறுமுகம், சிம்யாவின் கழுத்தை அறுத்துக் கொலை செய்தார்.

தகவலறிந்து வந்த வீரபாண்டி போலீஸார், சிம்யாவின் உடலை மீட்டு, பிரேதப் பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், ஆறுமுகத்தை கைது செய்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

ஆபாசமாக படம் பிடித்து வரதட்சணை கேட்டு மிரட்டிய கணவர்... இளம்பெண் தற்கொலை

விழுப்புரம், ஜன.23: விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் அருகே உள்ள பக்கிரிபாளையம் கிராமத்தை சேர்ந்தவர் நாராயணமூர்த்தி. இவரது மகள் பிரியங்கா (30 வயது), தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வந்தார். இவருக்கும் புதுச்சேரி வில்லியனூர் பகுதியை சேர்ந்தவருக்கும் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் திருமணம் நடந்தது.

வரதட்சணை தொடர்பாக மணமகன், மணமகள் இரு வீட்டாருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது. இதையடுத்து பிரியங்கா கணவரை பிரிந்து தனது பெற்றோர் வீட்டில் வசித்து வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் வீட்டில் தனியாக இருந்த பிரியங்கா தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். திருமணமாகி இரண்டரை மாதமே ஆன நிலையில் பிரியங்கா இறந்ததால் அவரது சாவு குறித்து விழுப்புரம் ஆர்.டி.ஓ. விசாரணை நடத்தி வருகிறார்.

இதற்கிடையே பிரியங்காவின் தற்கொலை குறித்து அவரது தாயார் சுமதி போலீசில் பகீர் புகார் அளித்துள்ளார். அதில், "மகளின் திருமணத்தின்போது 10 பவுன் நகை வரதட்சணையாக கொடுப்பதாக கூறினோம். ஆனால் 5 பவுன் மட்டுமே அப்போது கொடுக்க முடிந்தது. அதனால் எனது மகளை ஆபாசமாக படம் பிடித்து வைத்துக்கொண்டு, மீதி 5 பவுன் தராவிட்டால், அந்த ஆபாச படத்தை சமூக வலைதளத்தில் பதிவிடுவதாக அவரது கணவரே மிரட்டியுள்ளார்.

இதனால் மனமுடைந்த எனது மகள் தற்கொலை செய்துகொண்டார். ஆகவே அவரது தற்கொலைக்கு காரணமான கணவர் உள்பட அவரது பெற்றோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சாலையில் நடந்து சென்ற பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை: வாலிபர் கைது

விருதுநகர், ஜன.23: விருதுநகர் பகுதியை சேர்ந்த 15 வயது சிறுமி அங்குள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் 10-ம் வகுப்பு படித்து வருகிறார். இவர் சிறப்பு வகுப்பு முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது மாரீஸ்வரன் (24) என்பவர் அந்த மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்த புகாரின் பேரில் விருதுநகர் அனைத்து மகளிர் போலீசார் விசாரணை நடத்தி போக்சோ வழக்கில் மாரீஸ்வரனை கைது செய்தனர். இந்த வழக்கு தொடர்பாக மேலும் ஒருவரை தேடி வருகின்றனர்.

செய்யாறு அருகே அரசூரில்16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நில அபிவிருத்தி கல் கண்டெடுப்பு

செய்யாறு, ஜன.23: செய்யாறு அருகே நல்ல விளைச்சல் வேண்டி நட்டு வழிபட்ட நில அபிவிருத்தி கல் கண்டெடுக்கப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அடுத்த அரசூர் கிராம குடியிருப்புகளுக்கு மத்தியில், அங்கிருந்து திரும்பூண்டி செல்லும் சாலைக்கு அருகிலும் இரண்டு கற்கள் இருப்பதை வரலாற்று ஆய்வாளர் எறும்பூர் கை. செல்வகுமார் கண்டெடுத்தார். இதுகுறித்து மேலும் அவர் கூறியதாவது, கிராமத்துக்கு மத்தியில் இரண்டு கற்களை நட்டு பெருமாள் சாமியாகவும், மந்தைவெளி கல்லாகவும் (கால்நடைகளுக்கானது)திருவிழா காலங்களில் அபிஷேகம் நடத்தி வழிபட்டு வருவதாக கூறப்படுகிறது.

நெடுஞ்சாலைத் துறை அறிவிப்புகள் போன்று காணப்பட்டாலும் எழுத்துக்களை கூர்ந்து கவனித்த போது சிவமயம் என்றும், சங்கு போன்ற உருவங்களும் , எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருப்பதை காண முடிகிறது. இக்கல்லின் உயரம் 152 சென்டிமீட்டரும்,அகலம் 46 சென்டிமீட்டருமாக உள்ளது. ஒரே எழுத்து போன்று திரும்பத் திரும்ப பொறிக்கப்பட்டு உள்ளது. அதன் அருகில் மந்தைவெளிக் கல்லும் உள்ளது. இவ்வகை கல்லானது 16ஆம் நூற்றாண்டு பிற்பகுதிகளில் நல்ல விளைச்சல் தர வேண்டும் விதமாக எழுப்பப்பட்ட கல்லாக கூறலாம். மேலும் இக்கல் நில அபிவிருத்தி கல் என்றும் கூறுவார்கள்.

இதுபோன்று வட்டார கிராமங்களில் அரிதாகவே காணப்படுகிறது. இக் கல்லருகில் இன்னொரு கல் கால்நடைகளுக்கு வழிபாட்டு கல்லாக இருக்கலாம் (மந்தைவெளிகல்). இவ்வூர் மக்கள் நூற்றாண்டுகளுக்கும் மேலாக பெருமாள் சாமியாகவும், கால்நடைகளுக்கான பாதுகாப்பு அம்சமாக கருதப்படும் மந்தைவெளிக் கல்லாகவும் வழிபட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். மந்தைவெளிக்கல் பெரும்பாலான கிராமங்களில் உள்ளது என்றாலும் நில அபிவிருத்திக்காக எடுக்கப்பட்ட கல் அரிதாக காண முடிகிறது.

இயற்கையை நேசித்ததிலும் ,கடவுளாக வழிபட்டதிலும்,உழவுத் தொழில் சிறக்கவும் கிராம மக்களால் நில அபிவிருத்தி கல் நடப்பட்டு வழிபட்டு இருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது . இவ்வாறு வரலாற்று ஆய்வாளர் எறும்பூர் கை. செல்வகுமார் தெரிவித்தார்.

திருப்போரூர் கந்தசாமி கோயிலுக்கு சொந்தமான இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜன.23: திருப்போரூர் கந்தசாமி கோயில் மற்றும் ஆளவந்தார் அறக்கட்டளைக்கு சொந்தமான இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி, 3 வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென, அறநிலையத் துறை மற்றும் வருவாய் துறைக்கு கெடு விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, வழக்கறிஞர் பி. ஜெகந்நாத் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், 'செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூரில் உள்ள கந்தசாமி கோயில் மற்றும் ஆளவந்தார் அறக்கட்டளைக்கு சொந்தமான பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள 2 ஆயிரம் ஏக்கர் சொத்துக்களில், 550 ஏக்கருக்கும் மேற்பட்ட சொத்துக்களை தனி நபர்கள் ஆக்கிரமித்துள்ளனர்.

எனவே, கந்தசாமி கோயில் மற்றும் ஆளவந்தார் அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்துக்களை வருவாய்துறை அதிகாரிகள் மூலமாக அளவீடு செய்து, ஆக்கிரமிப்புகளை அகற்ற அறநிலையத் துறை மற்றும் தமிழக அரசின் வருவாய்த் துறை செயலருக்கு உத்தரவிட வேண்டும்' என, கோரியிருந்தார்.

இந்த வழக்கை ஏற்கனவே விசாரித்த உயர் நீதிமன்றம், 2022 மே மாதத்துக்குள் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென உத்தரவிட்டிருந்தது. ஆனால், உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், ஆக்கிரமிப்புகளை அகற்றவில்லை எனக் கூறி, வழக்கறிஞர் ஜெகந்நாத் உயர் நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், இந்த அவமதிப்பு வழக்கு கடந்த ஓராண்டுக்கும் மேலாக நிலுவையில் இருந்து வருகிறது. இன்னும் அறிக்கை தாக்கல் செய்யாமல் இருப்பது ஏன் என கேள்வி எழுப்பினர்.

நீதிபதிகள் அதிருப்தி: அதற்கு, அறநிலையத் துறை தரப்பில் ஆஜரான சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ஆர்.ஆர். அருண் நடராஜன், கந்தசாமி கோயில் மற்றும் ஆளவந்தார் அறக்கட்டளைக்கு சொந்தமான 125 ஏக்கர் நிலத்தை 233 பேர் ஆக்கிரமித்து இருப்பது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இவர்களை அந்த நிலத்தில் இருந்து சட்ட ரீதியாக அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிலர் வாடகை செலுத்த முன் வந்துள்ளனர். எனவே, ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி அறிக்கை தாக்கல் செய்ய 3 வாரம் அவகாசம் வழங்க வேண்டும் என, கோரினார்.

இதையடுத்து நீதிபதிகள், அவமதிப்பு வழக்கு நிலுவையில் இருக்கும் போது, கந்தசாமி கோயில் மற்றும் ஆளவந்தார் அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்துக்களை அபகரித்து ஆண்டுக் கணக்கில் அனுபவித்து வரும் ஆக்கிரமிப்பாளர்களை எப்படி வரன்முறைப்படுத்த முடியும் என அதிருப்தி தெரிவித்தனர்.

பின்னர், இந்த வழக்கில் ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி 3 வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென அறநிலையத் துறைக்கும், வருவாய் துறையினருக்கும் கெடு விதித்து விசாரணையை தள்ளி வைத்தனர்.

மயிலாப்பூர் ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் தை தெப்போத்ஸவம் பகல் 4 இரவு ஸ்ரீ சீதா லக்ஷ்மண ஹனுமந்த் சமேத ஸ்ரீ கோதண்ட ராமசுவாமி பட்டாபிஷேக ராமர் திருக்கோலத்தில் ஸ்ரீ பேயாழ்வார் தெப்பம் புறப்பாடு.

விளையாட சென்ற 3 வயது ஆண் குழந்தை.. சில நிமிடங்களில் நடந்த பெரும் துயரம்

ஆரணி, ஜன.23: திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை அடுத்த ராட்டினமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த இளவரசன்- பவானி தம்பதியரின் மகன் சஞ்சீவ் மித்ரன் (வயது 3). நேற்று முன்தினம் இரவு வீட்டின் அருகே உள்ள தண்ணீர் தொட்டி முன்பு அவன் விளையாடிக் கொண்டிருந்தான். நீண்டநேரம் விளையாடிய குழந்தை சஞ்சீவ் மித்ரனை திடீரென காணவில்லை. இதனால் பதறிய பெற்றோரும் அக்கம்பக்கத்தினரும் அவனை அந்த பகுதியில் தேடினர்.

அப்போது வீட்டின் அருகே இருந்த தண்ணீர் தொட்டியில் சஞ்சீவ் மித்ரன் தவறிவிழுந்து தண்ணீரில் மூழ்கியது தெரியவந்தது. உடனடியாக குழந்தையை மீட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர்.

அங்கு டாக்டர்கள் பரிசோதித்ததில் குழந்தை சஞ்சீவ் மித்ரன் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதைக்கேட்டதும் அவனது பெற்றோரும், உறவினர்களும் கதறி அழுதது உருக்கமாக இருந்தது. இந்த சோக சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னையில் மின்தடை ஏற்படும் இடங்கள்...

சென்னை, ஜன.23: சென்னையில் பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின் தடை செய்யப்படுகிறது. காலை 9 மணி முதல் பிற்பகல் 2 வரை மின் தடை செய்யப்படும். பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

அந்த வகையில், நாளை மின் தடை செய்யப்படும் பகுதிகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, சென்னையில் நாளை (23.01.2026) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக பின்வரும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். அதன்படி, மாதவரம் : லேதர் எஸ்டேட், ஜம்பலி நியூ காலனி, ரவி கார்டன், கேகேஆர் கார்டன், கண்ணாபுரம், ஆர்சி லிட்டில் விங்ஸ், ஆர்சி மேத்தா, RC Lorrels, பழனியப்பா நகர், மேத்தா நகர், அலெக்ஸ் நகர், A To D காலனி, பத்மாவதி நகர் மற்றும் விரிவு, தெற்கு டெலிபோன் காலனி, பாஷியம் நகர்.

ஜிஎன்டி சாலை: விஜிபி சந்தோஷ் நகர், பிருந்தாவன் கார்டன், ஐயர் தோட்டம், சாமியார் தோட்டம், தணிகாசலம் நகர் F ப்ளாக்ம், அண்ணா சாலை, காமாட்சி நகர், வாசுதேவன் தோட்டம், VOC தெரு, காமராஜ் சாலை 1 முதல் 4 தெரு வரை.

திருமுடிவாக்கம்: இந்திரா நகர், குரு நகர், விவேகானந்தா நகர், பழந்தண்டலம், நாகன் தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள்.

தமிழ்நாட்டை கஞ்சா போதையில் தள்ளாட வைத்திருப்பதுதான் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை - சீமான்

சென்னை, ஜன.23: நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

திருவள்ளூர் அருகே ஒண்டிக்குப்பம் பகுதியில் நான்கு பேர் கொண்ட கஞ்சா போதை கும்பல், இருவரை அடித்துக் கொன்ற கொடூர நிகழ்வின் சுவடு மறைவதற்குள், சென்னை வேளச்சேரியில் உணவு வழங்கும் இளைஞரை கஞ்சா போதையில் 3 பேர் கும்பல் அரிவாளால் வெட்டும் காணொளி இதயத்தை உறையச் செய்கிறது. கட்டுக்கடங்காத போதைப்பொருள் புழக்கத்தால் தமிழ்நாட்டில் நாள் தோறும் நடைபெறும் வன்முறை வெறியாட்டங்கள் நாம் நாகரீகம் அடைந்த நாட்டில்தான் வாழ்கின்றோமா? என்ற ஐயத்தை ஏற்படுத்தும் அளவிற்கு திமுக ஆட்சியில் தமிழ்நாடு போதை விற்பனையின் உச்சத்தை எட்டியுள்ளது வன்மையான கண்டனத்துக்குரியது.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு நாளும் கிலோ கணக்கில் கஞ்சா விற்பனை செய்யப்படுவதும், அதனால் அதிகளவில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகின்றனர் என்பதும் மிகுந்த கவலையையும், வேதனையையும் அளிக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள பெருநகரங்கள் முதல் சிறு கிராமங்கள் வரை கஞ்சா உள்ளிட்ட விற்பனை கட்டுக்கடங்காது அதிகரித்துள்ளது. ஏற்கனவே, மதுபானங்களை அரசே விற்பதன் மூலம் தமிழகக் குடும்பங்களைச் சீரழித்தது போதாதென்று, தற்போது போதைப்பொருட்களின் பயன்பாட்டினை கட்டுப்படுத்தத் தவறி, வளரிளம் தலைமுறைகளின் எதிர்காலத்தையே திமுக அரசு அழித்தொழிக்கிறது.

அதுமட்டுமின்றி, அதிகரித்து வரும் போதைப்பொருள் பயன்பாட்டால் கொலை, கொள்ளை, வழிப்பறி, கூட்டுப் பாலியல் வன்புணர்வு உள்ளிட்ட கொடுங்குற்ற நிகழ்வுகளும் பெருமளவு அதிகரித்து தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு முற்றுமுழுதாகச் சீரழியவும் காரணமாகியுள்ளது.

திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு போதைப்பொருள் புழக்கத்தால் நடைபெறும் வன்முறைகளில் இந்தியாவிலயே தமிழ்நாடு முதலிடம் பெறும் அளவிற்கு மிக மோசமான நிலையை எட்டியுள்ளது. பல லட்சம் கிலோ போதைப்பொருள் விற்பனை, பல்லாயிரக்கணக்கில் போதைப்பொருள் குற்ற வழக்குகள் என்பதே 5 ஆண்டு கால திமுக அரசின் சாதனையாகும்.

கடந்த காலங்களில் பெருநகரங்களில் மிக மிக ரகசியமாக மட்டுமே கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாடு என்றிருந்த நிலை மாறி, தற்போது தமிழ்நாட்டின் சிறிய கிராமங்களில்கூட மிக சாதாரணமாக கஞ்சா விற்பனை செய்யப்படுவது தமிழிளம் தலைமுறையினரின் எதிர்காலம் குறித்த மிகப்பெரிய அச்சத்தை ஏற்படுத்துகிறது.

அண்டை மாநிலங்களிலிருந்து நாள்தோறும் தமிழ்நாட்டிற்குள் கஞ்சா பொட்டலங்கள் மொத்தமாக கடத்தப்படும் நிலையில், அதனைத் தடுக்க திமுக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? கட்டுக்கடங்காத போதைப்பொருள் விற்பனையை தடுக்க முடியாதது அதன் நிர்வாகத் தோல்வியையே காட்டுகிறது.

தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களைப் பயன்படுத்துவோர், கடத்துவோர், பதுக்குவோர், விற்போர் மீது மட்டுமே அவ்வப்போது கண்துடைப்பிற்காக நடவடிக்கை எடுக்கப்படுகிறதே தவிர, போதைப்பொருள் உற்பத்தி முதலாளிகள் மீது தமிழ்நாடு காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால்தான் தமிழ்நாட்டில் இன்றுவரை போதைப்பொருள் பயன்பாட்டினை முழுமையாக ஒழிக்க முடியவில்லை.

மேலும், போதைப்பொருள் குற்றங்களைத் தடுக்கும் 'போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு காவலர்கள் பிரிவில் நிலவும் ஆட்கள் பற்றாக்குறையும் தமிழ்நாட்டில் கஞ்சா விற்பனையை முழுவதுமாகத் தடுக்க முடியாததற்கு மற்றுமொரு முக்கியக் காரணமாகும். ஒவ்வொரு ஊரிலும் அரசே மதுக்கடைகளை திறந்து வைத்து மக்களை குடிக்க வைத்துவிட்டு, போதைப்பொருளை ஒழிப்போம் என்று திராவிட மாடல் அரசு பேசுவது வெட்கக்கேடானது.

ஆகவே, போதையின் பாதையில் இளைஞர்கள் செல்ல வேண்டாம் என்று காணொளி வெளியிடுவதாலோ, ஆண்டுக்கு ஒரு முறை போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்பதாலோ மட்டும் போதைப்பொருள் ஒழிந்துவிடாது என்பதை இனியேனும் உணர்ந்து, காவல்துறையைத் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், சீரழிந்து வரும் தமிழ் இளந்தலைமுறையினரின் எதிர்காலத்தைப் பாதுகாக்க தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களை முழுவதுமாக ஒழிக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

மேட்டூர் அணை நீர்மட்டம் 95.67 அடியாக குறைந்தது

மேட்டூர், ஜன.23: மேட்டூர் அணையில் இருந்து கடந்த ஜூன் மாதம் 12-ந்தேதியில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. வருகிற 28-ந் தேதி வரை இந்த தண்ணீர் திறப்பு இருக்கும்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக அணைக்கு வரும் தண்ணீரின் அளவை விட அதிகளவில் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு வருவதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. அதன் படி இன்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 95.67 அடியாக குறைந்து காணப்பட்டது.

அணைக்கு வெறும் 11 கன அடி தண்ணீரே வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு 7 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. தற்போது அணையில் 59.37 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

பொங்கல் பரிசு ரூ.3 ஆயிரத்தை அரசுக்கு திருப்பி அனுப்பிய சமூக ஆர்வலர்

நெல்லை மாவட்டம் அம்பை அருகே உள்ள கருத்தப்பிள்ளையூர் கிராமத்தை சேர்ந்தவர் கிறிஸ்டோபர். சமூக ஆர்வலரான இவர் நேற்று அம்பை தலைமை தபால் நிலையத்திற்கு வந்தார்.

அங்கு தமிழக அரசு சார்பில் பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்பட்ட ரூ.3 ஆயிரம் பரிசு பணத்தை மணியார்டர் மூலம் தலைமை செயலகத்திற்கு அனுப்பி வைத்தார்.

பின்னர் வெளியே வந்த கிறிஸ்டோபர் கூறியதாவது:-

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏழை, எளியவர்கள் பொங்கல் பண்டிகை கொண்டாடும் விதமாக பரிசு தொகுப்போடு ரூ.3 ஆயிரம் ரொக்கம் வழங்கினார்.

அதனை நான் பண்டிகைக்கு 2 நாட்களுக்கு முன்பாக ரேஷன் கடையில்பெற்றுக்கொண்டேன். தற்போது தமிழக அரசு கடுமையான நிதிச்சுமையில் இருக்கும் நிலையில் என் வீட்டை போல், நாட்டையும் நான் நேசிப்பதால் அந்த ரொக்க பணத்தை வைத்துக்கொள்ள விரும்பவில்லை. அதனால் அரசின் கஜானாவில் பணத்தை சேர்க்கும்படி தலைமை செயலகத்துக்கு தபால் நிலையம் வழியாக அனுப்பி உள்ளேன்.

ஒவ்வொரு ஆண்டும் அரசு இதுபோன்ற பரிசுத்தொகை வழங்கும்போது அரசின் நிதி சுமையை கருத்தில் கொண்டு அந்த பணத்தை பெற்றுக்கொள்ளாமல் விட்டு விடுவேன். ஆனால் அந்த பணம் மீண்டும் அரசின் கஜானாவுக்கு முறையாக செல்லுமா? என்று எனக்கு சந்தேகம் இருந்தது.

இதனால் இந்த ஆண்டு பரிசுத்தொகையை பெற்று நானாகவே மணியாடர் மூலமாக அரசுக்கு அனுப்பி உள்ளேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

பூந்தமல்லி-வடபழனி மெட்ரோ ரெயில் சேவை பிப்ரவரி முதல் தொடக்கம்

சென்னை, ஜன.23: சென்னையில் 116 கிலோ மீட்டர் தொலைவுக்கு 3 வழித்தடங்களில் 2-ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டப் பணிகள் நடந்து வருகிறது. இதில், கலங்கரை விளக்கம் - பூந்தமல்லி வரையிலான வழித்தடத்தில் (26 கிலோ மீட்டர்) பூந்தமல்லி - போரூர் வரையிலான 10 கிலோ மீட்டர் தொலைவுக்கு பணிகள் முடிந்துள்ளது. இந்த பூந்தமல்லி - போரூர் இடையே மெட்ரோ ரெயில் சேவையை தொடங்குவதற்கான பாதுகாப்பு சான்றிதழையும் ரெயில்வே வாரியம் வழங்கியது.

இந்த நிலையில், போரூர் - வடபழனி இடையில் அனைத்துப் பணிகளும் முடிவடைந்து கடந்த 11-ந்தேதி வெற்றிகரமாக சோதனை ஓட்டம் நடத்தி பார்க்கப்பட்டது.

அப்போது, சிக்னல் அமைப்பு, தண்டவாள செயல்திறன், ரெயில் இயக்கம், உறுதித் தன்மை உள்ளிட்டவைகள் பரிசோதிக்கப்பட்டது.

இதனால், பூந்தமல்லி - வடபழனி இடையில் மெட்ரோ ரெயிலை இயக்குவதற்கான அனைத்து சோதனை பணிகளையும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் முழுமையாக முடித்துள்ளது. இதேபோல, போரூர் - வடபழனி இடையே இம்மாத இறுதிக்குள் ரெயில்வே பாதுகாப்பு கமிஷனர் ஆய்வு மேற்கொள்ள இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதைத்தொடர்ந்து, பூந்தமல்லி - வடபழனி வரையிலான வழித்தடத்தில் வரும் பிப்ரவரி மாதம் மெட்ரோ ரெயில் சேவை இயக்கப்பட இருக்கிறது.

இதுகுறித்து, சென்னை மெட்ரோ ரெயில்வே அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

பூந்தமல்லி - வடபழனி இடையே சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மேற்கொண்டு வந்த சோதனை பணிகள் அனைத்தும் நிறைவு பெற்றுள்ளது. ரெயில்வே பாதுகாப்பு கமிஷனர் குறிப்பிட்ட வழித்தடம், பயணிகள் வசதி உள்ளிட்டவைகளை ஆய்வு செய்த பின்னர் அவருடைய ஆய்வுக் குறிப்புகள் ரெயில்வே வாரியத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இதைத்தொடர்ந்து, பூந்தமல்லி - வடபழனி இடையே பயணிகள் ரெயில் சேவையை தொடங்குவதற்கான அனுமதியை வழங்கும். பிப்ரவரி மாதம் இவ்வழித்தடத்தில் சேவை தொடங்கும் என எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

உவரி சுயம்புலிங்க சுவாமி கோவிலில் தைப்பூச திருவிழா நாளை ஆரம்பம்

கன்னியாகுமரி, ஜன.23: உவரி ஸ்ரீ சுயம்புலிங்க சுவாமி திருக்கோவிலில் தைப்பூச திருவிழா நாளை மறுநாள் (24.1.2026) தொடங்குகிறது நாளை மறுநாள் காலை 4.30 மணிக்கு மங்கள இசையுடன் விழா தொடங்குகிறது. காலை 5.30 மணிக்கு யானை மீது கொடி பட்டம் ஊர்வலமும் தொடர்ந்து 7 மணிக்கு கொடி ஏற்றுதலும் நடக்கிறது.



தைப்பூச திருவிழா பிப்ரவரி 2ஆம் தேதி வரை 10 நாட்கள் நடக்கிறது. விழா நாட்களில் தினமும் காலை காலை 7 மணிக்கு விநாயகர் வீதி உலா வருதலும், 11.30 மணிக்கு உச்சகால பூஜையும், 12 மணிக்கு அன்னதானமும் இரவு 7 மணிக்கு சுவாமி வீதி உலா வரதலும், அதனைத் தொடர்ந்து சமய சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

முதல் நாள் இரவு 8 மணிக்கு சுவாமி இந்திர வாகனத்தில் வீதி உலாவருதலும், 25ஆம் தேதி கஜ வாகனத்திலும் 26 ஆம் தேதி அன்ன வாகனத்திலும், 27 ஆம் தேதி கைலாய பர்வதம் வாகனத்திலும், 28ஆம் தேதி காமதேனு வாகனத்திலும், 29ஆம் தேதி குதிரை வாகனத்திலும், 30ஆம் தேதி சட்டங்கால் சப்பரத்தில் சிவப்பு சாத்தி வருதலும், 31ஆம் தேதி சட்டங்கால் சப்பரத்தில் பச்சை சாத்தி சுவாமி வீதி உலா வருதலும் நடக்க உள்ளது.

31ஆம் தேதி இரவு 7.30 மணிக்கு சுவாமி தங்க தேரில் வள்ளி தெய்வானையுடன் வீதி உலா வருதலும், பிப்ரவரி 1ஆம் தேதி காலை 7.00 மணிக்கு பெரிய தேரோட்டமும் நடக்க உள்ளது.

இரவு 11 மணிக்கு சுவாமி ரிஷப வாகனத்தில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். பிப்ரவரி 2ஆம் தேதி இரவு 10 மணிக்கு தெப்ப திருவிழா நடக்க உள்ளது. தேரோட்டத்தை முன்னிட்டு உவரி சுயம்புலிங்க சுவாமி அன்னதான சேவா அறக்கட்டளை சார்பில் காலை முதல் அன்னதானம் நடக்க உள்ளது.

வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு... வங்கி ஊழியர்கள் 27-ந்தேதி நாடு தழுவிய வேலைநிறுத்தம்

சென்னை, ஜன.23: அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.நாகராஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

எல்.ஐ.சி. நிறுவனத்தில் 100 சதவீத அன்னிய நேரடி முதலீட்டை வழங்கிய மத்திய அரசின் முடிவை ஏற்க முடியாது. மேலும், வங்கி ஊழியர்களுக்கு வாரத்திற்கு 5 நாட்கள் மட்டுமே வேலை, வேலை நேரத்தை முறைப்படுத்துதல், ஓய்வூதியத்தை உயர்த்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளை நாங்கள் நீண்ட நாட்களாக வலியுறுத்தி வருகிறோம். எங்கள் கோரிக்கைகளை 6 மாத காலத்திற்குள் நிறைவேற்றுவதாக கடந்த 2024-ம் ஆண்டு இந்திய வங்கிகள் சங்கம் (ஐ.பி.ஏ.) உறுதி அளித்தது.

ஆனால், இதுவரை அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

கடந்த மார்ச் மாதம் அறிவிக்கப்பட்ட போராட்டம், அரசின் உறுதிமொழியை ஏற்று ஒத்திவைக்கப்பட்டது.

ஆனால் தற்போது வரை அரசுடன் எந்த முன்னேற்றமும் இல்லாததால், வருகிற ஜனவரி 27-ந்தேதி ஒரு நாள் நாடு தழுவிய வேலைநிறுத்த போராட்டத்தை நடத்த முடிவு செய்துள்ளோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தின் பல மாவட்டங்களில் சிக்குன் குனியா பாதிப்பு அதிகரிப்பு- பொது சுகாதாரத்துறை எச்சரிக்கை

சென்னை, ஜன.23: சிக்குன் குனியா என்பது ஏ.டி.எஸ். வகை கொசுக்களால் பரவும் ஒரு வகை வைரஸ் காய்ச்சல் ஆகும். இந்த காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டால் மூட்டு வலி, அதீத தசை வலி, உடல் அசதி, தலைவலி ஆகியவை ஏற்படும். தமிழகத்தில் கடந்த 2007-ம் ஆண்டு சிக்குன் குனியா பாதிப்பு தீவிர தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன்பின்னர், சிக்குன் குனியா பாதிப்பு கட்டுப்பாட்டுக்குள் வந்தது. ஆனாலும், அவ்வப்போது சிக்குன் குனியா பாதிப்புகள் தலைதூக்குகிறது.

இதற்கிடையே, தமிழகத்தில் கடந்த சில மாதங்களாகவே சிக்குன் குனியாவின் தாக்கம் மீண்டும் ஏற்பட்டிருப்பதாக சுகாதாரத்துறை தெரிவித்தது. தற்போது சென்னை, விழுப்புரம், செங்கல்பட்டு, தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களில் சிக்குன் குனியா பாதிப்பு அதிகரித்து வருவதாக பொது சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. சிக்குன் குனியா பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், மாவட்ட அளவில் கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து, பொது சுகாதாரத்துறை அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:-

சென்னை, விழுப்புரம், தென்காசி, தேனி, கடலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், அரியலூர் ஆகிய மாவட்டங்களிலும் சிக்கன் குனியா பாதிப்புகள் அதிகரித்து காணப்படுகிறது. எனவே, மாவட்ட சுகாதார அதிகாரிகள் உரிய கண்காணிப்புடன் கூடிய நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ள வேண்டும்.

ஆஸ்பத்திரிகள் மற்றும் ஆய்வகங்களில் உரிய நேரத்தில் சிக்குன் குனியா பரிசோதனைகளை முன்னெடுத்து நோய் பரவலைத் தடுப்பது அவசியம். ஆஸ்பத்திரிகளில் டெங்கு அல்லது சிக்குன் குனியாவுக்கென பிரத்யேக வார்டுகளை அமைக்க வேண்டும். பாதிப்பை கண்டறியும் எலிசா பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களை போதிய அளவு இருப்பில் வைத்திருப்பது கட்டாயம். நடமாடும் மருத்துவ விரைவுக் குழுக்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மாவட்ட கலெக்டர்கள் தலைமையில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் அதனை ஆய்வு செய்வதும் முக்கியம்.

வீடுதோறும் கொசு உற்பத்தியை கண்காணிப்பதற்கான பணியில் போதிய நபர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். மாவட்ட பூச்சியியல் வல்லுனர்கள், சுகாதார ஆய்வாளர்கள் வீடுகள் தோறும் லார்வா புழு உற்பத்தி குறித்த பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். காய்ச்சல் பாதிப்பு பதிவான பகுதிகளில் தீவிர தூய்மை பணிகளை செய்ய வேண்டும். தேவையான அளவு பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் உபகரணங்கள் இருப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும். தண்ணீர் தேங்கும் அனைத்து பொருட்களையும் அப்புறப்படுத்த வேண்டும்.

திடக்கழிவுகளை முறையாக அகற்றுவது கட்டாயம். வாரம் ஒரு முறை தண்ணீர் தொட்டிகளை சுத்தம் செய்வது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சிக்குன் குனியா தொடர்பான விழிப்புணர்வை மக்களிடத்திலே ஏற்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

24-ந்தேதி முதல் பிராட்வே பேருந்து நிலையம் செயல்படாது என அறிவிப்பு

சென்னை, ஜன.23: பிராட்வே பேருந்து நிலையத்தில் மறுசீரமைப்பு மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் நடைபெற இருப்பதால், கடந்த 7-ந்தேதி முதல் இங்கிருந்து இயக்கப்பட்ட பஸ்கள் ராயபுரம் மற்றும் தீவுத்திடலில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கும் பஸ் முனையத்திலிருந்து இயக்கப்படும் என்று சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் குறிப்பிட்ட தேதியில் இந்த மாற்றம் செயல்படுத்தப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், 24-ந்தேதி முதல் பிராட்வே பேருந்து நிலையம் செயல்படாது என சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் அறிவித்து உள்ளது. அதாவது, பிராட்வே பஸ் நிலையத்திலிருந்து இயக்கப்பட்ட பஸ்கள் ராயபுரம் மற்றும் தீவுத்திடலில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கும் பஸ் முனையங்களில் இருந்து 24-ந்தேதி முதல் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஞ்சா மாடல் தி.மு.க ஆட்சி..!- கோவையில் இளைஞரை கொடூரமாக தாக்கும் வீடியோவை பகிர்ந்து அண்ணாமலை கண்டனம்

சென்னை, ஜன.23: கஞ்சா மாடல் திமுக ஆட்சியின் கீழ் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது என பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கோவையில் கஞ்சா போதையில் இருந்த கும்பல் இளைஞரை கொடூரமாக தாக்கும் வீடியோவை பகிர்ந்து அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார். இது ஒரு இடத்தில நடந்த வன்முறை சம்பவம் அல்ல, சமீபத்தில் திருத்தணி, சென்னை, நேற்று கோவையில் நடந்துள்ளது.

இதுகுறித்து அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பாவது:-

கஞ்சா மாடல் தி.மு.க ஆட்சியில் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. கோவை கணபதி பகுதியில், கஞ்சா போதையில் இருந்த ஒரு கும்பல் ஒரு இளைஞரை மிகக் கொடூரமாகத் தாக்கியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அங்கிருந்த பொது மக்கள் சரியான நேரத்தில் தலையிட்டிருக்காவிட்டால், அந்தத் தாக்குதல் ஒரு உயிரிழப்பில் முடிந்திருக்கும்.

இது ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல. சமீபத்தில் திருத்தணியிலும், பிறகு சென்னையின் வேளச்சேரியிலும், நேற்று கோவையிலும் என மாநிலம் முழுவதும் இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன.

தி.மு.க-வோடு தொடர்புடையவர்கள் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுவது மீண்டும் மீண்டும் அம்பலமாகும் போது, ஏன் கஞ்சா வலைப்பின்னல் செழித்து வளர்கிறது என்பதும், வன்முறை ஏன் கட்டுக்கடங்காமல் போகிறது என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாலியல் குற்றங்கள் திருவண்ணாமலையில் அதிகமாக நடக்கிறதா..? - அமைச்சர் ரகுபதி பதில்

சென்னை, ஜன.23: தமிழக சட்டசபையின் 3ம் நாள் கூட்டத்தொடர் தொடங்கி நடைபெற்று வருகிறது. உறுப்பினர்கள் கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட துறைகளின் அமைச்சர்கள் பதில் அளித்தனர்.

இதன்படி கேள்வி நேரத்தின் போது பேசிய சட்டமன்ற உறுப்பினர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, திருவண்ணாமலையில் மக்கள் தொகையின் எண்ணிக்கைக்கு ஏற்ப கிளை சிறைகளின் எண்ணிக்கை மற்றும் சிறைவாசிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் ரகுபதி, "சிறைவாசிகளின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்பது தான் இந்த அரசின் நோக்கம். சிறைவாசிகள் அதிகம் பேர் இருக்க கூடாது. திருந்தியவர்கள் அதிகம் இருக்க வேண்டும் அவர்களை நல்வழிபடுத்த வேண்டும் என்பது தான் முதல்-அமைச்சரின் எண்ணம், செயல், சிந்தனை.

பாலியல் குற்றங்கள் திருவண்ணாமலையில் அதிகம் என்பது உண்மைக்கு புறம்பானது. தமிழகத்தில் 9 மத்திய சிறைச்சாலைகள், 13 மாவட்ட சிறைச்சாலைகள், 82 கிளை சிறைச்சாலைகள், 8 பெண்கள் சிறைச்சாலைகள், 3 திறந்தவெளி சிறைச்சாலைகள் உள்ளது. தமிழகத்தில் 23 ஆயிரத்து 783 சிறைவாசிகள் இருக்க அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகவும், அதில் 21, 558 சிறைவாசிகள் உள்ளனர்" என்று அவர் கூறினார்.

"அரசியலில் இருந்தே விலகுகிறேன்.." - குன்னம் ராமச்சந்திரன் திடீர் முடிவு.!

சென்னை, ஜன.23: ஓ.பன்னீர்செல்வம் ஆதரவு எம்.எல்.ஏ.வான வைத்திலிங்கம் நேற்று தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு தி.மு.க.வில் இணைந்தார். அவரைத் தொடர்ந்து குன்னம் தொகுதி முன்னாள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வான ராமச்சந்திரனும் தி.மு.க.வில் இணையப்போவதாக கூறப்பட்டது. அவரும் அதை உறுதி செய்தார்.

இந்த நிலையில், அரசியலில் பொதுவாழ்வில் இருந்து விலகுவதாக குன்னம் ராமச்சந்திரன் இன்று திடீரென அறிவித்துள்ளார். இது தொடர்பாக இன்று காலை வீடியோ பதிவு ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

"நேற்றைய தினம் திமுகவில் இணையப்போவதாக கூறினேன். அதற்கு ஒட்டுமொத்த குடும்ப உறுப்பினர்களும் எதிர்ப்பு தெரிவித்தனர். என்னை பெற்றெடுத்த தாய், வீட்டில் உள்ள ஜெயலலிதா படத்தை என்ன செய்வாய்? என்று கேட்டார். என்னுடைய மகளோ, இது அசிங்கமாக இல்லையாப்பா என்று கேட்டாள். இரவு முழுவதும் எனக்கு தூக்கம் வரவில்லை.

அதனால், பொதுவாழ்வில் இருந்து விலகும் முடிவை எடுத்துள்ளேன். உடல்நிலையை கருத்தில் கொண்டே இந்த முடிவை எடுக்கிறேன். நான் எந்த அரசியல் கட்சியிலும் இனி பயணிக்கப் போவதில்லை. அண்ணன் வைத்திலிங்கம், தொண்டர்கள் என்னை மன்னிக்கவும். தொண்டர்கள் அனைவரும் அவர்கள் விரும்பிய இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றட்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com**